பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikathir

விடியல் 03 வள்ளுவர் ஆண்டு 2050 ஆடி 20 திங்கட்கிழமை 05.08.2019 கதிர் 273

**இனிது ரகசியம் அல்ல!**

சில விடயங்களில் அரசியல்வாதிகள் எந்தப் பக்கம் நிற்கின்றார்கள் என்பதை கண்டறிவது – உறுதிப் படுத்துவது – கஷ்டம். அதை அதிகாரிகள், உயர் பதவியில் இருப்போர் தங்கள் வசதிக்குப் பயன்படுத்திக் கொள்வதுதான் இன்னும் துரதிஷ்டமான விடயம். பக்கம் 02

# மூன்றாவது அணியை அமைக்க மைத்திரி – சஜித் இரகசிய கூட்டு!

## ஐ.தே.க. தலைமைக்கு பெரும் சவால்



கொழும்பு, ஓக. 05

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் ஐக்கிய தேசியக்கட்சியின் பிரதித் தலைவர் அமைச்சர் சஜித் பிரேமதாஸ ஆகியோரின் கூட்டில், பலமான மூன்றாவது அணியொன்றை அமைப்பதற்கான முயற்சிகள் திரைமறைவில் இடம்பெற்று வருவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. பக்கம் 11

## வேட்பாளராக நிறுத்தினால் நிச்சயம் வெற்றியடைவேன்

### கரு ஜயசூரிய திட்டவட்டம்



கொழும்பு, ஓக. 05

ஜனாதிபதித் தேர்தலில் என்னை வேட்பாளராக ஐக்கிய தேசிய கட்சி நிறுத்தினால் நிச்சயம் வெற்றியடைவேன் எனச் சபாநாயகர் பக்கம் 11

## அமைச்சுப் பதவியிலிருந்து தூக்கப்படுகின்றார் ரஞ்சன்



கொழும்பு, ஓக. 05

பௌத்த தேரர்களை விமர்சித்தார் என்று கூறி ரஞ்சன் ராமநாயக்கவின் இராஜாங்க அமைச்சுப்பொறுப்பைப் பறிக்க பிரதமர் பக்கம் 11

## தலதா மாளிகை வாயில்களிலும் சோதனைச் சாவடிகள் அமைப்பு



கொழும்பு, ஓக. 05

கண்டி எசல பெரஹெரவை முன்னிட்டுத் தலதா மாளிகைக்குள் நுழையும் அனைத்து நுழைவாயில்களிலும் சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன எனக் கூறப்படுகின்றது. பக்கம் 11

## இரு வாரங்களுக்கு ஒருமுறை பாதுகாப்பு நிலைமை மதிப்பீடு

### பதில் பொலிஸ்மா அதிபர் உத்தரவு

கொழும்பு, ஓக. 05

புலனாய்வுப் பிரிவைக் கூட்டி பாதுகாப்பு நிலைமை தொடர்பாக மதிப்பீடுகளைச் செய்யுமாறு பதில் பொலிஸ்மா அதிபர் சி.டி.விக்ரம பக்கம் 11

## 10 கிலோ கஞ்சாவுடன் குடும்பத்தலைவர் கைது

### வடமராட்சி கிழக்கில் சம்பவம்



யாழ்ப்பாணம், ஓக. 05

10 கிலோ கிராம் கஞ்சா போதைப்பொருளுடன் குடும்பத்தலைவர் ஒருவர் கைது செய்யப்பட்டார் என்று பளைப் பொலிஸார் பக்கம் 11

## களுத்துறையில் கோர விபத்து! 6 பேர் சாவு; 52 பேர் படுகாயம்!!



கொழும்பு, ஓக. 05

களுத்துறை, வஸ்கடுவ பகுதியில் இரண்டு பஸ்கள் ஒன்றுடனொன்று மோதிய கோர விபத்தில் 6 பேர் பக்கம் 11

## ஐ.தே.க. கூட்டணியில் மொட்டு உறுப்பினர்கள்

கொழும்பு, ஓக. 10

ஐக்கிய தேசியக் கட்சி உள்ளிட்ட அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து உருவாக்கப்படும் பக்கம் 11

## ஐ.தே.கவின் கூட்டணி உடன்பாடு ஒத்திவைப்பு

கொழும்பு, ஓக. 05

ஐக்கிய தேசியக் கட்சி தலைமையில், பங்காளிக் கட்சிகள் இணைந்து உரு பக்கம் 11

## சுய ஆட்சியை அடைவதற்கு தமிழர் ஒற்றுமை அவசியம்

### வலியுறுத்துகின்றார் சம்பந்தன்



திருமலை, ஓக. 05

தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும், உரிமைகளை வென்றெடுக்கவும் தீவிரமாகவே செயற்பட்டு வருவதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் பக்கம் 11




காலைக்கதிர் Kalaikkathir


# ஆயுதப் போராட்டங்களின் அடிப்படைக் காரணம் அதிகார வர்க்கம் சமத்துவத்தைப் பேணாமையே!

## அமைச்சர் ஹக்கீம் சுட்டிக்காட்டு



அனைத்து ஆயுதப் போராட்டங்களுக்கும் அடிப்படைக் காரணமாக அமைந்திருப்பது அதிகார வர்க்கம், சமத்துவத்தைப் பேணாதமையே என அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

அத்துடன், ஏப்ரல்-21 தாக்குதலுக்குப் பின்னர் முஸ்லிம் சமூகம் ஊடகப் பயங்கரவாதத்தை எதிர்கொண்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மூத்த பத்திரிகையாளர் கலாபூஷணம் மறைந்த க.ப. சிவத்தின் நினைவஞ்சலிக் கூட்டம் நேற்றுக் கண்டியில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

சம உரிமையை இல்லாமலாக்குவதிலேயே இன்று அதிகார வர்க்கத்தின் காலம் சென்றுகொண்டிருக்கின்றது.

இதனால்தான் தேவையில்லாத பிரச்சினைகள் மற்றும் கலவரங்களில் நாங்கள் மாட்டிக்கொள்கின்றோம். அத்துடன் அனைத்து ஆயுதப் போராட்டங்களுக்கும் அடிப்படைக்காரணமாக இருந்திருப்பதும் அந்த இடங்களில் அதிகார வர்க்கமானது மற்றவர்களின் சம உரிமையை இல்லாமலாக்க முற்படுவதிலாகும்.

அத்துடன் ஊடக தர்மமானது தற்போது சற்றேனும் பின்பற்றப்படுவதாக இல்லை. சாதாரண விடயங்களையும் ஊதிப்பெருக்கும் விடயத்தை ஊடகங்களே மேற்கொண்டு வருகின்றன.

அச்சு ஊடகங்கள் எப்படி இருந்தபோதும் இலத்திரனியல் ஊடகங்கள் சமூகத்துக்குள் பிரச்சினைகளை ஏற்படுத்தும் விடயங்களையே ஒளிபரப்பிவருகின்றன. அனைத்து விடயங்களையும் அரசியலாக்கும் நிலையே தற்போது இருந்து வருகின்றது–என்றார்.

## சிறுவனுக்கு எமனாகிய கயிறு! விளையாட்டு வினையானது

யாழ்ப்பாணம், ஓக. 05

தெல்லிப்பழை பகுதியில் கயிற்றில் தொங்கி விளையாடிய சிறுவன் ஒருவர் அதில் சிக்கி பரிதாபமாக உயிரிழந்தார்.

சிவபாலன் அச்சயன் (வயது – 11) என்ற மாணவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடந்த 24ஆம் திகதி வீட்டில் கட்டப்பட்டிருந்த கயிற்றைப் பிடித்து சிறுவன் விளையாடிக் கொண்டிருந்த போது அவனது தாயார் விளையாட வேண்டாம் என்று அறிவுறுத்திவிட்டு மதிய உணவு தயாரிப்பில் ஈடுபட்டுள்ளார். சிறிது நேரத்தில் சிறுவனை அழைத்த போது அவனது சத்தத்தைக் காணவில்லை என்று விளையாடிய இடத்தில் தேடிய போது சிறுவனது கழுத்தில் கயிறு இறுகியிருப்பதை கண்ட தாய் உடனடியாக உறவினர்களின் உதவியுடன் தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றுள்ளார்.

இதையடுத்து சிறுவன் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளான். (ஐ)

## காணாமல்போயுள்ளதாம் விமானப்படையின் ராடர்!

கொழும்பு, ஓக. 05

இலங்கை விமானப்படையின் எவ்-7 போர் விமானத்தில் பொருத்தப்பட்டிருந்த ஒரு ராடர் கருவி திருத்தப் பணிகளுக்காக சீனாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த நிலையில் காணாமல் போயுள்ளது.

இந்தச் சம்பவம் 2014 ஆம் ஆண்டு இடம்பெற்றதாக நாடாளுமன்றத்துக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த ராடர் கருவியின் பெறுமதி 10 ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்தக் கருவி பயங்கரவாத நடவடிக்கையில் ஈடுபடுபவர்கள் கையில கிடைத்தால் நாட்டின் பாதுகாப்பிற்கு பெரும் சவாலாக அமையும் எனக் கூறப்படுகிறது.

## விபத்தில் இளைஞன் சாவு

திருமலை, ஓக. 05

திருகோணமலை, துவரங்காடு பகுதியில் நேற்று முன் தினம் இரவு இடம்பெற்ற விபத்தில் இளைஞன் ஒருவர் உயிரிழந்தார் மற்றுமொருவர் படுகாயமடைந்துள்ளார்.

படுகாயமடைந்த நபர் திருகோணமலை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக உப்புவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்தபோதே இருவரும் விபத்தில் சிக்கியுள்ளனர். அனுராதபுரத்தைச் சேர்ந்த 28 வயதுடைய கசுன் லக்ஸான் என்பவரே விபத்தில் உயிரிழந்துள்ளார். அதே பகுதியைச் சேர்ந்த 27 வயதுடைய புவிராஜா ஜீவராஜா என்பவரே படுகாயமடைந்துள்ளார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## மைத்திரி தெற்குக்கு கீர்த்தி மத்திக்கு

கொழும்பு, ஓக. 05

பதவிகளை இராஜினாமா செய்த மாகாண ஆளுநர்கள் மைத்திரி குணரத்ன , ரஞ்சித் கீர்த்தி தென்னக்கோன் ஆகியோர் இன்று மீண்டும் ஆளுநர்களாக பதவியேற்கவுள்ளனர் .

அதன்படி மைத்திரி குணரத்ன தென்மாகாண ஆளுநராகவும் , கீர்த்தி தென்னக்கோன் மத்திய மாகாண ஆளுநராகவும் நாளை ஜனாதிபதி முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்யவுள்ளதாக தெரிகிறது.

மேற்படி ஆளுநர்மார் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எம்பிக்கள் செய்த முறைப்பாடுகளையடுத்து அவர்களை இடமாற்றம் செய்யத் தீர்மானித்த ஜனாதிபதி அதற்காக அவர்களைப் பதவி விலக கோரியிருந்தார். (ஐ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அப்படி ஒரு விவகாரம் யாழ். மாவட்டப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் நியமன இழுபறியில் தொடர்கின்றது.

யுத்தத்துக்கு மத்தியில் வன்னியில் தங்கள் உயிரைப் பணயம் வைத்து அரும்பணியாற்றிய ஓரிரு மருத்துவர்களில் டாக்டர் சத்தியமூர்த்தியும் ஒருவர். யாழ். போதனா வைத்தியசாலையில் மருத்துவப் பணிப்பாளர் பதவியை ஏற்றுத் திறம்பட சேவையாற்றி வருகின்றார் அவர். சேவையில் இருந்து ஓய்வுபெறும் வரை அந்தப் பதவியில் அவர் தொடர்வார் என்று அவரை கௌரவப்படுத்தியிருக்கின்றது மத்திய சுகாதார அமைச்சு.

இப்போது யாழ். மாவட்ட சுகாதார சேவைப் பணிப்பாளர் பதவி வெற்றிடமாகியிருக்கின்றமையை அடுத்து, அப்பதவிக்கும் மருத்துவர் சத்தியமூர்த்தியை நியமித்து மத்திய சுகாதார அமைச்சு.

இப்படி ஒருவரை இரண்டு பதவிக்கு நியமித்தமையை எதிர்த்துக்கண்டனக்குரல்கள் எழுந்தன.

யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் பதவி மத்திய அரசின் சுகாதார அமைச்சின் கீழ் உள்ளது.

யாழ். மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் பதவி மாகாண சபைக்குள் வருவது. மத்திய அரசின் அதிகாரியை மாகாண சபையின் முக்கிய பதவிக்கு மேலதிகமாக நியமித்து, மாகாண நிர்வாகத்துக்குரிய அதிகாரத்தை மத்திய சுகாதார அமைச்சு தன் கைக்குப் பிடுங்குகின்றது என்பதே அந்நியமனத்தை வன்மையாகக் கண்டிப்போரின் ஆதங்கம். அதில் நியாயம் இல்லாமலும் இல்லை.

சட்டரீதியாக மாகாண சபைக்கு – அதன் நிர்வாகத்துக்கு – அதன் பிரதம செயலாளர் மூலம் – வழங்கப்பட்ட நிதி அதிகாரத்தை, தம்மிஷ்டப்படி மாகாண நிர்வாகத்துக்குக் கீழ் வராத ஓர் அதிகாரிக்கு ஆளுநரோ, பிரதம செயலாளரோ கையளிக்க முடியாது. அது சட்டப்படி தவறானது என்றும் கூடச் சுட்டிக்காட்டப்பட்டது.

இந்த விடயங்களை ஒட்டி இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா உட்பட வடக்கின் சில எம்.பிக்கள், வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம், எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா போன்றோர் பகிரங்க அறிக்கை வெளியிட்டமையுடன், இத்தகைய நியமனத்தைத்தாங்கள் கொள்கை அடிப்படையில் முழுமையாக எதிர்க்கின்றனர் என்று தெரிவித்து வடக்கு மாகாண ஆளுநருக்குக் கடிதமும் எழுதினர்.

இதையடுத்து, டாக்டர் சத்திய மூர்த்திக்கு வழங்கப்பட்ட இரண்டாவது நியமனம் நிறுத்தப்பட்டது.

பிரச்சினை அத்துடன் சுமுகமாகத் தீர்ந்தது என்றுதான் பலரும் நம்பினர். ஆனால் சர்ச்சை முடியவில்லை. தொடருகின்றது.

அண்மையில் யாழ்ப்பாணம் வந்த மத்திய சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன, மேற்படி இரண்டாவது பதவியில் – யாழ். மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் பதவியில் – டாக்டர் சத்தியமூர்த்தி தொடருவார் என்ற அறிவிப்பை வெளியிட்டமையை அடுத்து சிக்கல் மீண்டும் வெளிக்கிளம்பியது.

மேற்படி இரண்டாவது பதவியை மருத்துவர் சத்தியமூர்த்திக்கு நூறு நாள்கள் வழங்கும் முடிவுக்கு வடக்கு ஆளுநர் வந்திருக்கின்றார் என்ற தகவலை இப்பத்தியில் சில வாரங்களுக்கு முன்னர் கோடி காட்டியிருந்தேன்.

அது நிறைவேறும் போல இருக்கின்றது. அதுவல்ல, பிரச்சினை. இந்த விடயத்தில் சில அரசியல்வாதிகளின் நிலைப்பாடு குறித்து முன்னுக்குப் பின் முரணாகத் தகவல் வருவதுதான் விவகாரம்.

மேலதிகமாக அந்த இரண்டாவது நியமனம் மருத்துவர் சத்தியமூர்த்திக்கு வழங்கப்படுகின்றமையை மாவை சேனாதிராசா, சி.வீ.கே. சிவஞானம் உட்படத் தமிழ்க் கூட்டமைப்புப் பிரமுகர்கள் கொள்கை ரீதியாக எதிர்க்கின்றார்கள் என்பது வெளிப்படையானது. ஆனால் திரைமறையில் அந்த நியமனத்துக்கு கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் ஆதரவாக இருக்கின்றார் என்று அரசல் புரசலாகக் கதை அடிபட்டது.

உடனடியாக சுமந்திரன் எம்.பியிடமே இது குறித்துக் கேட்டேன். இது விடயத்தில் மாவை சேனாதிராசா உட்பட கூட்டமைப்பினரின் நிலைப்பாடுதான் தமது நிலைப்பாடும் என்று உறுதிபடக் கூறினார் சுமந்திரன். மாகாணத்தின் நிர்வாக அதிகாரத்தை மத்தியிடம் ஒப்படைப்பது அங்கீகரிக்க முடியாதது என்று அவர் என்னிடம் தெளிவாகவே கூறியிருந்தார்.

இந்த நிலையில் அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் யாழ். மாவட்டப் பிரிவின் செயலாளர் உட்பட மூவரைக் கொண்ட உயர்மட்ட டாக்டர் குழு ஒன்று சனியன்று காலை வடக்கு மாகாண ஆளுநரைச் சந்தித்தது. டாக்டர் சத்தியமூர்த்திக்கு மேலதிகமாக யாழ். மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் பதவியை நூறு நாள்களுக்கு வழங்கும் திட்டத்தைக் கைவிடுமாறு ஆளுநரை வலியுறுத்திக் கோரிய இந்த மூவர் குழு, அதற்கான காரணங்களையும் – தங்கள் விளக்கத்தையும் – அடுக்கியது.

அதை செவிமடுத்த வடக்கு ஆளுநர் அப்படியானால் நூறு நாள்களுக்குப் பதிலாக ஒரு ஐம்பது நாள்களுக்கு அந்தப் பதவிக்கு அவரை நியமிக்கவா?" – என்று முதலில் ஒரு கேள்வியைக் கேட்டாராம். அதற்குப் பின் அவர் கூறிய தகவல்தான் சர்ச்சையை ஏற்படுத்தியிருக்கின்றது.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் யாழ். மாவட்ட அலுவலர் குழுவைப் பார்த்து இது விடயத்தில் (டாக்டர் சத்தியமூர்த்தியின் விடயத்தில்) உங்கள் சங்கத்தின் தலைவர் மருத்துவர் பாதினி மற்றும் சுமந்திரன் எம்.பி. ஆகியோருடன் பேசி, கலந்துரையாடித்தான் நான் நடவடிக்கை எடுக்கிறேன்." – என்று கூறினாராம் ஆளுநர்.

அதைக் கேட்டு ஆச்சரியப்பட்டுப் போனார்கள் மூவர் குழு டாக்டர்கள்.

பிராந்திய சுகாதார சேவைகளும் மத்திய அரசின் கீழ்தான் வரவேண்டும், மாகாணங்களின் கீழ் அல்ல என்ற நிலைப்பாட்டில் மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் தலைமை இருப்பதால், தமது சங்கத் தலைவர் மருத்துவர் பாதினி, வடக்கு ஆளுநரிடம் சத்தியமூர்த்தியின் நியமனத்தை வரவேற்று கருத்துக் கூறியிருக்கலாம் என்பது அவர்கள் கருத்து.

ஆனால், சுமந்திரன் எம்.பியும் அதை வரவேற்றிருப்பார் என்று அவர்கள் நம்பவில்லை.

எது, எப்படி என்றாலும் இவ் விடயத்தில் தம் நிலைப்பாட்டை சுமந்திரன் எம்.பி. பகிரங்கப்படுத்துவது முக்கியமானது என நம்புகிறோம்.

மாகாண நிர்வாகத்தின் அதிகாரத்தை மத்திய அதிகாரியிடம் ஒப்படைப்பது என்பது கொள்கை ரீதியாகத் தமிழ்க் கூட்டமைப்பு எதிர்க்க வேண்டிய ஒன்று. இது விடயத்தில் – குறிப்பாக மாகாண நிதி அதிகாரத்தை மத்திய அரசு அதிகாரியிடம் ஒப்படைப்பதற்கு எதிராகத் தேவைப்பட்டால் நீதிமன்றத்தை ரிட் மனு மூலம் நாடி தடை உத்தரவு பெறுவதற்கும் சில வட்டாரங்களில் முயற்சி எடுக்கப்படுகின்றது. அதற்கும் சுமந்திரன் தரப்புக்கும் தொடர்பு இருப்பதாகத் தெரியவில்லை.

இந்தப் பின்புலத்தில், வழக்கமாகக் கூட்டமைப்பின் நிலைப்பாட்டை ஓங்கிக் குரல் கொடுத்து வெளிப்படுத்தும் சுமந்திரன், இந்த விடயத்தில் மௌனம் சாதிப்பதும் –

தமது கருத்தைப் பொத்தி வைத்திருப்பதும் –

ஆளுநர் போன்ற உயரதிகாரிகள் தங்கள் நிலைப்பாட்டுக்கு ஆதரவாக சுமந்திரனின் பெயரைக் குறிப்பிடுகின்றமையும் –

சில சந்தேகங்களை வலுவாகக் கிளப்புகின்றன.

தமது நிலைப்பாட்டை மக்களுக்குத் தெளிவுபடுத்துவாரா சுமந்திரன் எம்.பி.?

- மின்னல் -

# கருவுடனும் மைத்திரிபால தொலைபேசி உரையாடல்!

## யானையின் வேட்பாளராக களமிறங்குகின்றீர்களா எனவும் கேள்வி



கொழும்பு, ஓக. 05

அரசியல் கட்சிகளுக்கிடையில் ஜனாதிபதி வேட்பாளர் விவகாரம் சூடுபிடித்துள்ள நிலையில், சபாநாயகர் கரு ஜயசூரியவுடன் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தொலைபேசியில் உரையாடியுள்ளார்.

ஐக்கிய தேசிய முன்னணி சார்பில் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளராகக் கரு ஜயசூரியவே களமிறங்கவுள்ளார் என்ற செய்தி வெளிவந்துள்ள நிலையில், இதனை உறுதிப்படுத்தும் வகையிலேயே இந்தத் தொலைபேசி உரையாடலை ஜனாதிபதி நடத்தியுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு 15 நிமிடங்கள் வரை இந்த உரையாடல் இடம் பெற்றுள்ளது.

இதன்போது ஐக்கிய தேசிய முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறங்குகின்றீர்களா? என்று கரு ஜயசூரியவிடம் ஜனாதிபதி வினவியுள்ளார்.

நான் எந்நேரமும் ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறங்கத் தயார். ஆனால், இது தொடர்பில் கட்சியின் உயர்பீடம்தான் இறுதித் தீர்மானம் எடுத்துப் பகிரங்கமாக அறிவிக்க வேண்டும். அதுவரைக்கும் என்னால் உறுதியான பதிலை வழங்க முடியாது என்று இதன்போது கரு ஜயசூரிய பதிலளித்துள்ளார்.

இதேவேளை, ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் வேட்பாளராக முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ களமிறங்கவுள்ளார் என்ற செய்தி வெளிவந்துள்ள நிலையில், அவருடனும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடந்த வியாழக்கிழமை தொலைபேசியில் உரையாடியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# தீர்ப்பு கிடைக்காவிட்டால் அடுத்த வருடமே தேர்தல்!

## கூறுகிறார் மஹிந்த தேசப்பிரிய



கொழும்பு, ஓக. 05

இந்த மாதம் 15ஆம் திகதி முன்னர் நீதிமன்றத்தின் உத்தரவு கிடைக்காவிட்டால் இந்த வருடத்தில் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு முடியாமல் போகும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

மாகாண சபைத் தேர்தல் தொடர்பான நீதிமன்ற உத்தரவு எதிர்வரும் 10 நாள்களுக்குள் கிடைக்கப் பெறாவிட்டால் ஜனாதிபதி தேர்தலுக்கான தயார்ப்படுத்தல்களுடன் முரண்படும் என்றும் அதன் காரணமாக மாகாண சபைத் தேர்தல்களை அடுத்த வருடமே நடத்தவேண்டி ஏற்படும் என்றும் அவர் கூறினார்.

இதேவேளை, செப்ரெம்பர் 20 மற்றும் ஒக்ரோபர் 15 ஆம் திகதிக்கு இடையிலான காலப் பகுதியில் ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்படவுள்ள நிலையில், ஆரம்ப கட்ட ஏற்பாடுகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி தேர்தலானது 2018ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியலை அடிப்படையாகக் கொண்டு இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மத மற்றும் கலாசார நிகழ்வுகளை முன்னிட்டு இறுக்கமான பாதுகாப்பு

கொழும்பு, ஓக. 05

இந்த மாதத்தில் நடைபெறவுள்ள பல்வேறு முக்கிய சமய நிகழ்வுகளை முன்னிட்டு நாட்டின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக பாதுகாப்புத் துறையினர் தெரிவித்துள்ளனர்.

சிலாபம் மறை மாவட்டத்திற்குட்பட்ட கல்பிட்டி தலவில் புனித அன்னமாள் ஆலயத்தின் வருடாந்த ஆடி மாதத் திருவிழா நேற்று இடம்பெற்றது.

அத்துடன், எதிர்வரும் நாட்களில் கண்டி எசல பெரஹெரா மற்றும் யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின வருடாந்த தேர்த் திருவிழா என்பன இடம்பெறவுள்ளன.

இந்த நிலையில், நாட்டின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும், மீண்டுமொரு தீவிரவாத தாக்குதல் நடத்தப்படுவதற்கான வாய்ப்புக்கள் ஏதும் கிடையாது என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சுமித் அத்தபத்து தெரிவித்துள்ளார். (ஐ)

# சஜித் - ரணில் இணைந்த நிருவாகமொன்று தேவை

கொழும்பு, ஓக. 05

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் அமைச்சர் சஜித் பிரேமதாஸவும் இணைந்து நிர்வகிக்கும் அரசொன்றை அமைக்க வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் துசார இந்துனில் தெரிவித்தார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் பின்னாசன எம்.பி.க்களுக்கும் இடையில் நேற்று இரவு அலரி மாளிகையில் நடைபெற்ற விசேட கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் கூறினார்.

தற்பொழுது ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டணியிலுள்ள வர்களையும், புதிய சக்திகளையும் ஒன்றிணைத்து ஒன்றாக நின்று செயற்படக் கூடிய கூட்டணியொன்றை உருவாக்க வேண்டும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ஐ)

# கழிவு தேயிலையுடன் மூவர் கைது

கொழும்பு, ஓக. 05

கழிவு தேயிலையை ஏற்றிச் சென்ற குற்றச்சாட்டில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப்பொலிஸார் தெரிவித்தனர்.

மாவனல்லைப் பகுதியில் வைத்து கழிவு தேயிலையை ஏற்றிச்சென்ற மூன்று லொறிகள், பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் சுற்றிவளைக்கப்பட்டன.

அதன்போது, 18ஆயிரத்து 725 கிலோகிராம் கழிவு தே யிலை கைப்பற்றப்பட்டதுடன், அதனை ஏற்றிச்சென்ற மூன்று லொறிகள் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு செல்லப்பட்டன.

சந்தேகநபர்களை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# வெலிக்கடைச் சிறை தலைமை அதிகாரி சுட்டுக் கொலை!

கொழும்பு, ஓக. 05

அம்பலாங்கொடை, குளிகொட சந்தியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் காயமடைந்த நபர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த நபர் வெலிக்கடைச் சிறைச்சாலையின் தலைமை அதிகாரி என அடையாளம் காணப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஐ)

# சஜித்தே வேட்பாளர்!

## கூட்டணித் தலைவர்கள் விடாப்பிடி

**கொழும்பு, ஓக. 05**
**ஐக்கிய தேசிய முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளராக சஜித் பிரேமதாஸவே களமிறங்கும் வாய்ப்பு ஏற்படலாம் எனக் கூறப்படுகின்றது. சஜித் அணியின் விடாப்பிடியும், கூட்டணி தலைவர்களின் சஜித் ஆதரவு நிலைப்பாடும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது.**

ஐக்கிய தேசியக் கட்சி தலைமையில் புதிய கூட்டணியொன்று இன்று கைச்சாத்திடப்படுமென்றும், அதைத் தொடர்ந்து புதிய ஜனாதிபதி வேட்பாளர் பற்றிய அறிவித்தல் வெளியாகுமென்றும் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதேவேளை, கரு ஜயசூரியவுடன் இரகசியமாகப் பேச்சு நடத்திய ரணில், அவரை ஜனாதிபதி வேட்பாளராக்கும் தீர்மானத்தை தனித்து மேற்கொண்டார்.

கருவை ஜனாதிபதி வேட்பாளராக ரணில் தீர்மானித்ததன் பின்னணியில் ஒரேயொரு காரணமேயுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. அடுத்த நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் மீண்டும் பிரதமர் பதவியை ஏற்கவேண்டுமென ரணில் திட்டமிடும் சூழலில், தனக்கு ஏற்ற ஜனாதிபதியொருவரை நியமிக்க ரணில் விரும்புகிறார். சஜித்தை ஜனாதிபதியாக்கினால், தனித்து செயற்படுவார், தனது கட்டுப்பாட்டில் இருக்கமாட்டார் என ரணில் தரப்பு கருதுவதாலேயே, கருவை ஜனாதிபதியாக்க ரணில் விரும்பினார்.

எனினும், ரணிலின் முடிவுக்கு கட்சியின் செயற்குழுவிற்குள் கடும் எதிர்ப்பு கிளம்பியுள்ளது. சஜித் தவிர்ந்த வேறொரு ஜனாதிபதி வேட்பாளரை ஏற்க மாட்டோம் எனக் கட்சிக்குள் பலமான அபிப்ராயம் உருவாகியுள்ளது. கட்சியை ரணிலால் புதிதாக கட்டியெழுப்ப முடியாது, புதிய தலைமைத்துவம் அவசியமென செயற்குழுவில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

கட்சித் தலைமையையும், பதவிகளையும் தொடர்ந்து கட்டிப்பிடித்துக் கொண்டிருக்கத்தான் விரும்பவில்லையென இதன்போது ரணில் தெரிவித்தார். ரணிலை இந்த முடிவுக்கு அழைத்து வந்ததே ஒரு வெற்றியென சஜித் தரப்பு கருதுகிறது.



இந்தநிலையில், கூட்டணி கட்சிகளின் தலைவர்கள் சம்பிக்க மற்றும் ராஜித ஆகியோர் திடீர் நிலைப்பாடு எடுத்து, சஜித் வேட்பாளர் எனில் தாம் கூட்டணியிலிருந்து விலகவுள்ளனர் என எச்சரித்துள்ளனர்.

எனினும், கூட்டணியின் ஏனைய பங்காளி கட்சிகளின் தலைவர்களான மனோ கணேசன், ரவூப் ஹக்கீம், ரிஷாத் பதியுதீன் ஆகியோர் சஜித் ஆதரவு நிலைப்பாட்டில் இருக்கிறார்கள். ஜனாதிபதி தேர்தலில் வெற்றியடைய வேண்டுமெனில், சஜித் தவிர்ந்த வேறொருவரும் தமது கூட்டணியில் இல்லையென அவர்கள் ரணிலிடம் உறுதியாக தெரிவித்துள்ளனர்.

ராஜித, சம்பிக்க போல பகிரங்கமாக கூறி விவகாரத்தை பொதுவெளிக்குக் கொண்டு வரவில்லையே தவிர, தமது நிலைப்பாட்டில் உறுதியாக உள்ளனர்.

சம்பிக்க, ராஜித ஆகியோரின் கட்சிகளுக்கு தமிழ் முற்போக்கு கூட்டணி, முஸ்லிம் கட்சிகள் இரண்டினதைபோன்ற கட்சிக் கட்டமைப்போ, வாக்கு வங்கியோ கிடையாது என்பதால், இந்த விவகாரத்தில் மூன்று கட்சிகளின் நிலைப்பாடே வெற்றியடைய வாய்ப்புள்ளதாகத் தெரிகிறது.

இந்த இழுபறிகளால் இன்று ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான புதிய கூட்டணிக்கான ஒப்பந்தம் கைச்சாத்தாகாது. ரணில் தரப்பிலுள்ள ரவி கருணாநாயக்க போன்றவர்கள், யாப்பு சீர்திருத்தம் மேற்கொள்ளாமல் இன்று ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவேண்டுமென வலியுறுத்தி வருகிறார்கள்.

எனினும், இந்த விவகாரத்தில் சஜித் ஆதரவு நிலைப்பாடு கட்சிக்குள் வலுத்து வருவதால், இன்று ஒப்பந்தம் கைச்சாத்தாகாது எனக் கூறப்படுகின்றது.

இதேவேளை, ஐக்கிய தேசிய கட்சிக்குள் வாய்ப்பளிக்கப்படாவிட்டால் தனித்து போட்டியிடுவது குறித்தும் சஜித் தரப்பில் ஆலோசிக்கப்பட்டு வருகிறது. ஜனாதிபதி மைத்திரிபாலவின் ஆலோசனையில் நடக்கும் இந்த முயற்சியில், சுதந்திரக்கட்சி மற்றும் ஐ.தே.க.வின் ஒருபகுதியை இணைத்து சஜித்தை களமிறக்கும் முயற்சிகள் நடக்கின்றன.

சஜித்தின் அதிரடி நகர்வுகளால், சஜித் அல்லாத வேட்பாளர் களமிறங்கினால் வெற்றியடைய மாட்டார்கள் என்ற நிலைப்பாட்டை ஏற்படுத்தி வருகிறது. இதனால், சஜித்தே வேட்பாளர் என்ற நிலைப்பாட்டுக்கு ரணில் வருவதை தவிர வேறு வாய்ப்பில்லையெனத் தெரிகிறது. (ஐ)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## ரணில் - பிரேமதாஸா வேறுபாடு

ஐக்கிய தேசியக் கட்சியில் ஜனாதிபதி வேட்பாளர் நியமனத்துக்காகப் போராடும் அதன் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸா, அது கிடைக்காது என்று தெரிந்தால் மாற்று முயற்சி ஒன்றில் ஈடுபடுவார் என சில செய்தி வட்டாரங்கள் தகவல் வெளியிட்டிருக்கின்றன.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் கூட்டு அமைக்கவும், அந்தக் கூட்டின் மூலம் தன்னை ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தச் செய்யவும் முயற்சித்து வருகின்றார் தற்போதைய ஜனாதிபதியும் சுதந்திரக் கட்சித் தலைவருமான மைத்திரி பால சிறிசேன.

மைத்திரிபால சிறிசேன, சஜித் பிரேமதாஸா ஆகிய இந்த இருவரினதும் எதிர்பார்ப்புகள் நிறைவேறாவிட்டால், இந்த அதிருப்தியாளர்கள் இருவரையும் கூட்டுச் சேர்த்து மூன்றாவது அணியொன்றை அமைப்பதற்கான முயற்சிகள் திரை மறைவில் இடம்பெறுகின்றன என்பதே இப்போது வெளியாகியுள்ள செய்தியாகும்.

*"எந்தச் சவாலையும் முகம் கொடுத்து ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறங்கத் தயார்"* – என்று பகிரங்கமாக சஜித் பிரேமதாஸா அறிவித்தமைக்குப் பின்னால் இப்படி அரசியல் சூத்திரம் பொதிந்துள்ளது என்கின்றன அந்த அரசியல் வட்டாரங்கள்.

ஐக்கிய தேசியக் கட்சியின் அரசியலில் கடந்த கால் நூற்றாண்டு காலமாகக் கோலோச்சி வரும் ரணில் விக்கிரமசிங்க, தொடர்ந்தும் கட்சியின் அரசியலில் நீடிப்பாராயின் தமக்கு இப்போதைக்கு அரசியலில் தலைமைத்துவ எல்லைக்கு உயர முடியாது என்ற யதார்த்தத்தைப் புரிந்து கொண்டுள்ளார் சஜித் பிரேமதாஸா.

இந்த யதார்த்தப் புறச் சூழலில் – நெருக்கடியில் – இருந்து வெளியே வருவதற்கான ஒரே வழி அல்லது மார்க்கம் மாற்று அரசியல் பாதை ஒன்றைத் தேர்ந்தெடுப்பதுதான் எனச் சிந்திக்கின்றார் போலும் சஜித் பிரேமதாஸா.

இத்தகைய மாற்றுவழி குறித்துச் சிந்திக்கும் சஜித் பிரேமதாஸா, கட்சியை வழி நடத்தும் விதத்தில் – பாணியில் – தமது தந்தை ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கும், தற்போதைய கட்சித் தலைவர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும்

இடையில் உள்ள வேறுபாட்டை – வித்தியாசப் போக்கை – ஒரு தடவை சிந்தித்துப் பார்ப்பது நல்லது.

கட்சிக்குள் தமது போக்குக்கு மாறானவர்களை – முரண்பட்டவர்களை – ஒரேயடியாக கட்சியிலிருந்து நீக்கித் தூக்கி எறிந்து ஒதுக்கியவர் பிரேமதாஸா. கட்சியின் தூண்களான காமினி திஸநாயக்கா, லலித் அத்துலத் முதலி போன்ற முக்கிய தலைவர்களே ரணசிங்க பிரேமதாஸாவினால் ஓரங்கட்டி ஒதுக்கப்பட்டனர் என்பது மறுக்கற்பாலதல்ல.

ஆனால், ரணில் விக்கிரமசிங்க அப்படிச் செயற்பட்டவர் அல்லர். கடந்த பதினைந்து ஆண்டுகளாகத் தன்னுடன் அரசியல் போட்டித் தனத்தில் முரண்டு பிடித்து நிற்கும் சஜித் பிரேமதாஸாவைக் கூட அவர் கட்சியிலிருந்து வெட்டி விட முயன்றவரல்லர். தமது தலைமைத்துவத்தைத் தக்க வைக்கத் தந்திரங்கள், உபாயங் கள் நாடியவரே தவிர, ரணில் கட்சியில் ஏனையோரை வெட்டி, வெளியேற்ற முயன்றவரே அல்லர்.

இன்னும் விளக்கமாகச் சொன்னால் கட்சியின் மாற்றுத் தலைமைக்குப் போட்டியிட்டு விட்டு, திடீரென கட்சியை விட்டு வெளியேறி, அப்போது ஜனாதிபதியாக இருந்த மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசில் தமது பதினெட்டு சகாக்களுடன் அமைச்சராகப் போய்ச் சேர்ந்தார் கரு ஜெயசூரிய. அவருடன் கூடப் பகைமை பாராட்டாமல், அவரும் அவரது சகாக்களும் மனம் நொந்து மஹிந்த தரப்பிடம் இருந்து வெளியேறிய போது, கட்சிக்குள் மீள அரவணைத்து, கட்சியில் முக்கிய இடம் அளித்துச் சேர்த்துக் கொண்டவர் ரணில்.

அது மட்டுமல்ல. கட்சிக்குள் இன்னும் கரு ஜெயசூரியவுக்கு முக்கிய இடமும் கொடுத்து, சபாநாயகராக்கியமையோடு அல்லாமல், இப்போது தேவைப்பட்டால் தாம் இடம் விட்டு விலகி, கரு ஜெயசூரியவையே ஜனாதிபதி வேட்பாளராக நியமிக்கவும் ரணில் முயற்சிக்கின்றார்.

கட்சியின் நலனுக்காகவும் வெற்றிக்காகவும் ஜனாதிபதி வேட்பாளர் பதவியை பல தடவைகள் தியாகம் செய்தவர் ரணில் விக்கிரமசிங்க.

ஜனாதிபதி வேட்பாளராக இருந்த காமினி திஸநாயக்கா குண்டு வெடிப்பில் உயிரிழந்தபோது ரணிலை அந்த வேட்பாளர் பொறுப்பை ஏற்கச் சொன்னார்கள். ஆனால் காமினி திஸநாயக்காவின் துணைவியாருக்கு அந்த இடத்தை விட்டுக் கொடுத்தார் ரணில்.

மற்றைய இரு தடவைகள் – ஒரு தடவை சரத் பொன் சேகாவுக்கும், மற்றொருமுறை மைத்திரிபால சிறிசேனவுக்கும் – பொதுவேட்பாளரை நிறுத்தும் திட்டத்தின் கீழ் விட்டுக் கொடுத்தார்.

இரண்டு தடவைகள் அவர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டுத் தோற்றார் என்பது உண்மையே. இரண்டு தோல்விகளுமே புலிகளால் ஒப்பேற்றப்பட்டவை என்பது மறுக்கக் கூடியதல்ல.

ஒரு முறை தேர்தல் சமயத்தில் சந்திரிகா மீது தற்கொலைத் தாக்குதல் நடத்தப்பட்டமையால் எழுந்து பெரும் அனுதாபத்தில் ரணில் தோற்கடிக்கப்பட்டார்.

அடுத்த தடவை வடக்கு, கிழக்கில் தமிழ் மக்களை வாக்களிக்க விடாமல் தடுத்ததன் மூலம் ரணில் வெற்றி வாய்ப்பை இழக்கச் செய்வதற்குக் காரணமாயினர் புலிகள்.

ஆகவே, இந்தத் தடவை – கடைசி ஒரு வாய்ப்பை – ரணில் விக்கிரமசிங்கவுக்கு வழங்குவதுதான் – இளைஞரான சஜித் பிரேமதாஸா விட்டுக் கொடுப்பதுதான் – பொருத்தமானதாக இருக்கும்.

# புதிய கூட்டமைப்பு குறித்து இன்னமும் முடிவு இல்லை!

## அடித்துக் கூறுகிறார் சம்பிக்க



கொழும்பு, ஓக. 05

புதிய கூட்டமைப்பை உருவாக்கும் முயற்சிகள் தொடர்ந்தும் கலந்துரையாடல் மட்டத்திலேயே உள்ளன என்றும் இன்னும் அது தொடர்பில் இறுதித் தீர்மானம் எட்டப்படவில்லை என்றும் அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் மேலும் சில கட்சிகள் இணைந்து ஸ்தாபிக்கவுள்ள புதிய கூட்டமைப்பு தொடர்பில் இன்னும் இறுதி தீர்மானம் எட்டப்படவில்லை.புதிய கூட்டமைப்பை உருவாக்கும் செயற்பாடு தொடர்ந்தும் கலந்துரையாடல் மட்டத்திலே உள்ளது. இன்னும் அது தொடர்பில் இறுதி தீர்மானம் எட்டப்படவில்லை. இந்த புதிய கூட்டமைப்பிற்குச் செயற்திட்டம் மற்றும் தலைமைத்துவ சபை என்பன அவசியம் – என்றார். (ஐ)

# மகாவலி அதிகார சபையின் அனுசரணையுடன் கொக்குத்தொடுவாயில் சிங்களக் குடியேற்றங்கள்

முல்லைத்தீவு, ஓக. 05

முல்லைத்தீவு – கொக்குத்தொடுவாய் கமநலசேவைநிலைப் பிரிவுக்குட்பட்ட தமிழ் மக்களின் பூர்வீக குளமான, சின்னக்குளத்தை மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையினர் ஆக்கிரமித்திருந்தனர்.

சின்னக்குளத்திற்குள் கடந்த 2017 ஆம் ஆண்டிலிருந்து சிங்கள மக்கள் சிலர் அத்துமீறி மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையின் அனுமதியுடன் தோட்டப் பயிர்ச்செய்கைகள் செய்து வருகின்றனர். தோட்டச் செய்கைக்கென குளத்தினுள் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளதுடன், குடில்களும் அமைக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் தற்போது அக்குளத்தை ஊடறுத்து மின்சார வேலி, மின் கம்பங்கள், புதிய வீதிகள் என்பன அமைக்கப்பட்டு வருகின்றன.

இந்த நடவடிக்கையானது குளத்தினுள் மேலும் புதிய சிங்களக் குடியேற்றங்களை அமைத்து விஸ்தரிக்க எடுக்கப்படும் நடவடிக்கையாக இருக்கலாமென அப்பகுதி தமிழ் மக்கள் அச்சம் வெளியிடுகின்றனர்.

அதேவேளை, இந்தச் சின்னக்குளத்தின் நீர்ப்பாசனத்தைப் பயன்படுத்த கடந்த 1984ஆம் ஆண்டு இடப்பெயர்வுக்கு முன்னர் தாம் விவசாய நடவடிக்கையில் ஈடுபட்டன எனவும் அப்பகுதி தமிழ் மக்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும் சின்னக்குளத்தின் கீழ் சுமாராக 300 ஏக்கருக்கும் மேலான வயல் நிலங்கள் காணப்படுகின்றன எனவும் விவசாயிகள் தெரிவித்தனர். கடந்த 30ஆண்டுகளுக்கும் மேலான இடப்பெயர்வு காரணமாக, குறித்த சின்னக்குளமானது சிதைவடைந்து காணப்படுகின்றது.

எனவே தற்போது இந்தக் குளத்தின் கீழ் உள்ள விவசாய நிலங்களில் பெரும்போக மானாவாரிச் செய்கை மாத்திரமே செய்கை பண்ணப்படுகின்றது.

இந்தக் குளத்தைச் சீரமைத்து தரும்படி கமநல சேவை நிலையத்திடம் முறையிட்டிருந்த நிலையில், அவர்களால் இக்குளத்தின் சீரமைப்பிற்கென நிதி ஒதுக்கப்பட்டிருந்தபோதும் மகாவலி அபிவிருத்தி அதிகார சபை இடையூறு விளைவிப்பதாக மக்கள் தெரிவித்தனர்.

மேலும் இந்தக் குளத்தின் சீரமைப்புத் தொடர்பில், கடந்தமாதம் 18ஆம் திகதி இடம்பெற்ற கரைதுறைப்பற்றுப் பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன் கேள்வி எழுப்பியிருந்த நிலையில், இக்குளத்தின் சீரமைப்புக்கு ஒரு கோடி 30 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டபோதும் மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை தமக்குரிய இடத்திற்குள் குளம் இருப்பதாக தெரிவித்து சீரமைப்புக்கு தடை விதித்ததால், அந்தக் குளத்தின் சீரமைப்பிற்கு வந்த நிதியை வேறு குளத்தின் சீரமைப்பிற்கு மாற்றியதாக கமநலசேவை அபிவிருத்தி உத்தியோகத்தர் தெரிவித்திருத்தமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# புதுக் கூட்டணி தாமதம் அகிலவிராஜ் விளக்கம்



கொழும்பு, ஓக. 05


நாட்டைப் பாதுகாக்கும் மற்றும் நாட்டை மேம்படுத்தும் பெரும் கூட்டணியொன்றை உருவாக்குவது தொடர்பான கலந்துரையாடலில் பல்வேறு புதிய யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் கல்வியமைச்சர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

இந்த கருத்துகள் தொடர்பில் அனைத்துச் சட்சிகளுடனும் கலந்துரையாடுவது எனக் கொள்கை ரீதியிலான தீர்மானத்துக்கு வந்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இந்தப் பேச்சுகள் நிறைவடையும் வரையில், புதிய கூட்டணி தொடர்பிலான ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதை ஒத்திவைப்பதற்கு இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்தக் கூட்டணியானது ஜயநாயகத்தைக் கட்டியெழுப்புவதை நோக்கமாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளதாகவும் கல்வியமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் குறிப்பட்டுள்ளார்.

# ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் துண்டுப் பிரசுரங்கள் கல்முனையில்



கொழும்பு, ஓக. 05

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தேர்தல் பிரசார துண்டுப் பிரசுரங்களை நாடு முழுவதும் விநியோகிக்க ஆரம்பித்துள்ளது.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம் மக்கள் செறிந்து வாழும் கல்முனை, மருதமுனை, நற்பிட்டிமுனை பகுதிகளில் பரவலாக விநியோகிக்கப்பட்டுள்ளன.

நான்கு பக்கங்களில் அச்சடிக்கப்பட்டு இந்தத் துண்டுப் பிரசுரம் வெளியிடப்பட்டுள்ளது. (ஐ)

**நாளை** 06.08.2019 செவ்வாய்க்கிழமை

நட்சத்திரம்: சித்திரை பி.இ 4.33 வரை
திதி : ஷஷ்டி மு.இ 7.23 வரை
இராகுகாலம் : 3.04 – 4.34
சுப நேரம் : 10.34 – 12.04

# திண்டாடுகின்றது ஐ.தே.க. கொண்டாடுகிறார் மஹிந்த



கொழும்பு, ஓக. 05

ஜனாதிபதிவேட்பாளராக சஜித்பிரேமதாஸவை நிறுத்துவதா அல்லது கரு ஜயசூரியவை நிறுத்துவதா என்று தெரிவு செய்வதில் ஐக்கிய தேசியக் கட்சியின் உயர்பீடம் திண்டாடுகின்றது என எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஜனாதிபதி வேட்பாளர் விவகாரத்தால் ஐக்கிய தேசியக் கட்சியின் மானம் காற்றில் பறக்கின்றது. ரணில் விக்கிரமசிங்க – சஜித் பிரேமதாஸ – கரு ஜயசூரிய என மூவருக்கிடையில் அரங்கேற இருந்த சமர் தற்போது சஜித் – கரு என இருவருக்கிடையில் மூண்டுள்ளது. இதனால் எவரை வேட்பாளராகக் களமிறக்குவது என ஐ.தே.கவின் உயர்பீடம் திண்டாடுகின்றது.

ஜனாதிபதித் தேர்தலில் படுதோல்வியடையப் போகின்ற ஐ.தே.க., வேட்பாளர் விடயத்தில் நடு வீதியில் வந்து மோதுவதைப் பார்க்கும்போது சிரிப்புத்தான் வருகின்றது. சர்வதேசத்தின் நிகழ்ச்சி நிரலுக்கேற்ப ஐ.தே.க. என்னதான் ஆட்டம் போட்டாலும் எமது அணியில் களமிறங்கும் வேட்பாளர்தான் வெற்றியடைவார். வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்த ஜனாதிபதித் தேர்தலில் எமது அணி வெற்றியடைவது உறுதி – என்றார். (ஐ)

## இன்னொரு தாக்குதலுக்கு இனி வாய்ப்பே கிடையாது

### இராணுவப் பேச்சாளர் கூறுகிறார்

கொழும்பு, ஓக. 05

இலங்கையில் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும், மீண்டுமொரு தீவிரவாதத் தாக்குதல் நடத்தப்படுவதற்கான வாய்ப்புக்கள் ஏதும் கிடையா என்றும் இராணுவப் பேச்சாளர்



பிரிகேடியர் சுமித் அத்தபத்து தெரிவித்துள்ளார்.

அமெரிக்கத் தூதரகம் தமது நாட்டுக் குடிமக்களுக்கு விடுத்துள்ள இரண்டாம் நிலை எச்சரிக்கை குறித்து கருத்து வெளியிட்டுள்ள அவர்,

மீண்டுமொரு தாக்குதல் நடத்தப்படுவதற்கான வாய்ப்புக்கள் குறித்து இதுவரை எமக்கு எந்தத் தகவல்களும் கிடைக்கவில்லை. அவ்வாறான தகவல்கள் கிடைத்தால், அது குறித்து மக்களுக்கு அறிவிக்க உடனடி நடவடிக்கை எடுக்கப்படும்.

அதேவேளை, மீண்டுமொரு தாக்குதல் நடத்தப்படாத வகையில், பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்றும் பிரிகேடியர் சுமித் அத்தபத்து தெரிவித்துள்ளார். (ஐ)

## நல்லூரில் சோதனைச் சாவடிகள்; பொலிஸ் அதிகாரிகள் ஆராய்வு

### மேலதிக சோதனைக் கூடங்கள் தேவை எனக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக. 05

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசாமி ஆலய வருடாந்தத் திருவிழா நாளை செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகவுள்ள நிலையில் ஆலயத்துக்கு வரும் பக்தர்களை சோதனைக்குட்படுத்தி அனுமதிப்பது தொடர்பில் பொலிஸ் அதிகாரிகள் நேற்று நேரில் ஆராய்ந்தனர்.

அடியவர்களைச் சோதனைக்குட்படுத்தி அனுமதிப்பதற்கு வசதியாக யாழ்ப்பாணம் மாநகர சபையால் 3 லட்சம் ரூபா செலவில் 8 சோதனைக் கூடங்கள் தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்ட போதும் மேலதிகமாக 4 கூடங்கள் தேவை எனப் பொலிஸாரால் கோரப்பட்டுள்ளது.

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசாமி ஆலய வருடாந்தத் திருவிழா நாளை செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. 25 நாள்கள் இடம்பெறும் இந்தத் திருவிழாக்களில் இம்முறையும் பல லட்சம் அடியவர்கள் நல்லூரில் திரள்வர்.

வழமை போன்று வீதி மறியல்கள் போடப்பட்ட போதும் ஏப்ரல் 21 பயங்கரவாதத் தாக்குதலைக் காரணம் காட்டி சோதனைச் சாவடிகளும் அமைக்கப்படவுள்ளன.

இதற்காக யாழ்ப்பாணம் மாநகர சபையால் 3 லட்சம் ரூபா செலவில் 8 சோதனைக் கூடங்கள் தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டன.

இந்நிலையில்எந்தெந்த இடங்களில் சோதனைக் கூடங்களை அமைத்து அடியவர்களை சோதனை செய்வது தொடர்பில் யாழ்ப்பாணம் பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் யாழ்ப்பாணம் தலைமையகப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆகியோர் நேற்று ஞாயிற்றுக்கிழமை நேரில் ஆராய்ந்தனர்.

அவர்களுடன் யாழ்ப்பாணம் மாநகர சபை பொறியியலாளர் உள்ளிட்ட அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இதன்போது தமக்கு மேலதிகமாக சோதனைக் கூடங்கள் தேவைப்பட்டால், அவற்றைச் செய்துதருமாறு பொலிஸாரால் கோரப்பட்டது. குறிப்பாக 12 சோதனைக் கூடங்கள் அவசியம் என்றும் இதன்போது பொலிஸ் அதிகாரிகளால் சுட்டிக்காட்டப்பட்டது.

இதேவேளை, இலங்கையில் தற்போது விடுமுறை காலம் என்பதால் தாக்குதல்கள் நடத்தப்படலாம் என்று அமெரிக்கா தனது குடிமக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளமையும் இதன்போது பொலிஸாரால் சுட்டிக்காட்டப்பட்டது. (ஐ – 07)

## ரணிலின் ஹெலியால் இரண்டு பேர் காயம்


கொழும்பு, ஓக. 05

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பயணித்த ஹெலிகொப்டரின் காற்றாடிகளில் இருந்து வீசிய காற்றில் மரக் கிளைகள் முறிந்து வீழ்ந்ததில் இருவர் காயமடைந்துள்ளனர்.

கதிர்காமத்தில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொள்வதற்காகப் பிரதமர் சென்ற வேளையில் இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

மாணிக்க கங்கைக்கு அருகில் இருந்த மரக் கிளை உடைந்து குளித்துக் கொண்டிருந்த இருவர் மீது விழுந்தமையினால் இருவரும் காயமடைந்து கதிர்காமம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்த அனர்த்தம் காரணமாக மாத்தறை பிரதேசத்தைச் சேர்ந்த 53 வயதான ஜகத் மற்றும் 64 வயதான கருணாசீலி ஆகியோர் காயமடைந்துள்ளனர். (ஐ)

## இலங்கையின் முதல் 'செல்பி'



கொழும்பு, ஓக. 05

இலங்கையைச் சேர்ந்த இரண்டு ஆராய்ச்சியாளர்கள் உருவாக்கிய செய்மதியான ராவணா, விண்வெளியில் இருந்து எடுத்த முதலாவது படம் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கையினால் முதல்முறையாக தயாரிக்கப்பட்ட ராவணா செய்மதி, ஜப்பானிய நிறுவனம் ஒன்றினால் விண்ணுக்கு அனுப்பப்பட்டது.

இந்தச் செய்மதி தற்போது படங்களை அனுப்பத் தொடங்கியுள்ளது. இலங்கைத் தீவையும் அதனைச் சுற்றிய கடற்பகுதிகளையும் முதலில் படம் பிடித்துள்ளது ராவணா.

இலங்கை தனது செய்மதி மூலம் இலங்கைத் தீவை படம் பிடித்திருப்பது இதுவே முதல்முறையாகும். (ஐ)

## கீர்த்தியும் பதவி விலகினார்!



கொழும்பு, ஓக. 05

தென் மாகாண ஆளுநர் கீர்த்தி தென்னக்கோன், தனது இராஜினாமா கடிதத்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கையளித்துள்ளார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நேற்று முன்தினம் மத்திய மாகாண ஆளுநர் மைத்திரி குணரத்ன, தனது பதவியை இராஜினாமா செய்தார். அதற்கு முன்னதாக, ஊவா மாகாண ஆளுநர் மார்ஷல் பெரேரா தனது இராஜினாமா கடிதத்தை ஜனாதிபதியிடம் கையளித்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# காஷ்மீரில் திடீர்ப் படைக் குவிப்பு மாநிலம் எங்கும் பெரும் பதற்றம்!

**ஸ்ரீநகர்,ஒக.05**
**காஷ்மீரில் திடீரென்று படைகள் குவிக்கப்பட்டு, சுற்றுலா பயணிகள், அமர்நாத் பக்தர்கள் அவசரமாக வெளியேற்றப்பட்டமையால் அங்கு பதற்றம் நிலவுகிறது. இதனால் வங்கிகளின் ஏ.டி.எம். மையங்களிலும், பெற்றோல் விற்பனை நிலையங்களிலும் கூட்டம் அலைமோதுகிறது. இயற்கை எழில் கொஞ்சும் காஷ்மீர் மாநிலத்தில் கடந்த சில நாள்களாக அசாதாரண சூழ்நிலை நிலவுகிறது.**

இந்தியாவிலேயே அதிக அளவில் முஸ்லிம்களை கொண்டுள்ள இந்த மாநிலத்துக்கென்று இந்திய அரசியல் சாசனம் சிறப்பு அந்தஸ்து வழங்கி உள்ளது.

இந்தச் சிறப்பு அந்தஸ்தையும், சலுகைகளையும் வழங்கியுள்ள இந்திய அரசியல் சாசனத்தின் பிரிவுகள் 370 மற்றும் 35 – ஏ ஆகியவற்றை மத்திய அரசு ரத்து செய்யப்போவதாக முதலில் தகவல்கள் பரவின.

அந்த மாநிலத்தில் ஏற்கனவே 60 ஆயிரம் பாதுகாப்பு படை வீரர்கள் களப்பணியில் உள்ளனர். அமர்நாத் யாத்திரைப் பாதுகாப்புக்கென சுமார் 20 ஆயிரம் வீரர்கள் அமர்த்தப்பட்டனர். பாதுகாப்பு மேம்பாடு என்ற பெயரில் 10 ஆயிரம் வீரர்கள் அனுப்பப்பட்டனர்.

ஆக, இதுவரை இல்லாத வகையில் 90 ஆயிரம் பாதுகாப்பு படை வீரர்கள் குவிக்கப்பட்டுள்ளனர்.

எங்கு பார்த்தாலும் பாதுகாப்பு படையினர் ரோந்து, கண்காணிப்பு பணியில் ஈடுபட்டுவருகின்றமையால் மக்கள் இடையே இனம்புரியாத பதற்றம் காணப்படுகிறது.

காஷ்மீரில் இமயமலை பகுதியில் அமைந்துள்ள குகைக்கோவிலில் பனிலிங்கத்தை தரிசிக்க மேற்கொள்ளப் படுகிற அமர்நாத் யாத்திரை கடந்த மாதம் முதலாம் திகதி தொடங்கி நடந்து வந்தது.

இந்த நிலையில்தான், காஷ்மீர் பள்ளத்தாக்கு பகுதியில் பயங்கரவாதிகள் கொடூர தாக்குதல்கள் நடத்த வாய்ப்புகள் இருக்கின்றன என உளவுத்தகவல்கள் கிடைத்திருக்கின்றன என்ற அதிர்ச்சி தகவலை இந்திய மத்திய அரசு வெளியிட்டது.

அத்துடன், அமர்நாத் புனித பயணப் பாதையில், குறிபார்த்து சுடுவதில் வல்லமை படைத்த அமெரிக்க 'ஸ்னைப்பர் எம் – 24' ரக துப்பாக்கி உள்ளிட்ட ஆயுதக்குவியல்களை பாதுகாப்பு படையினர் கண்டெடுத்து உள்ளனர். சிக்கியுள்ள ஆயுதங்களில் பாகிஸ்தான் இராணுவத் தளவாட தொழிற்சாலையின் முத்திரை உள்ளது என இராணுவத் துணைத்தளபதி தில்லான் வெளியிட்ட தகவல்கள் அதிர்வலைகளை ஏற்படுத்தின.

இந்த ஆயுதக்குவியல்கள், அமர்நாத் புனித பயணிகளைத் தாக்கும் நோக்கத்துடன்தான் குவிக்கப்பட்டன என ஊகிக்கப்படுகிறது.

அதைத் தொடர்ந்துதான், இந்த மாதம் 15 ஆம் திகதி நிறைவு அடைய இருந்த அமர்நாத் யாத்திரையை உடனே முடித்துக்கொண்டு, புனித பயணிகள் சொந்த ஊர்களுக்கு திரும்புமாறு காஷ்மீர் மாநில அரசு அறிவுறுத்தியது.

இதன் காரணமாக சுமார் 22 ஆயிரம் புனித பயணிகள், அவசர அவசரமாக காஷ்மீர் பள்ளத்தாக்குப்பகுதியில் இருந்து நேற்று முன்தினம் ஊர்களுக்குப் புறப்பட்டனர். பள்ளத்தாக்கு பகுதியில் இருந்து பயணிகளை மீட்பதற்காக விமானப்படை விமானங்கள் ஈடுபடுத்தப்படுகின்றன. சிறப்பு பஸ் வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன.

காஷ்மீரில் 43 நாள்கள் நடக்கிற மசில் மாதா யாத்திரையும் பாதுகாப்பு காரணங்களையொட்டி ரத்து செய்யப்பட்டுள்ளது. பட்டார் பள்ளத்தாக்கு பகுதியில் மசில் கிராமத்தில் அமைந்துள்ள துர்க்காவை வழிபடுவதற்காக பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் நாடு முழுவதும் இருந்து இங்கு வருகின்றமை குறிப்பிடத் தகுந்தது. இந்த புனிதப் பயணமும் திடீரென ரத்தாகி உள்ளதால் பக்தர்கள் அவசரமாகத் தத்தமது ஊர்களுக்குத் திரும்புகின்றனர்.



பள்ளத்தாக்குபகுதியில் இருந்துசுற்றுலா பயணிகள் மற்றும் புனித பயணிகளை வெளியேற்ற இந்திய விமானப்படையின் விமானங்களும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

இந்தப் பதற்றமான சூழ்நிலையில், அசம்பாவிதங்களை எதிர்பார்த்து ஸ்ரீநகர் மக்கள் தங்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்களை வாங்கி குவிக்கத்தொடங்கி உள்ளனர். பெற்றோல் நிலையங்களில் வாகனங்களுக்குப் பெற்றோல், டீசல் நிரப்ப மக்கள் கூட்டம் நிரம்பி வழிகிறது. ஏ.டி.எம். மையங்களிலும் பணம் எடுப்பதற்காக மக்கள் நீண்ட வரிசைகளில் காத்து நின்றனர்.

இருப்பினும், அத்தியாவசிய பொருள்களை வாங்கி குவிக்கத் தேவையில்லை, பெற்றோல், டீசல் ஒரு மாத காலத்துக்கு தேவையான அளவு இருப்பு உள்ளது என ஸ்ரீநகர் கலெக்டர் சாகித் சவுத்ரி அறிவித்துள்ளார். ஸ்ரீநகரில் உள்ள தேசிய தொழில்நுட்ப கல்லூரி (என்.ஐ.டி) வகுப்புகள் ரத்து செய்யப்பட்டன எனத் தகவல்கள் வெளியாகி உள்ளன.

ஸ்ரீநகர் அரசு மருத்துவமனையில் ஊழியர்கள் யாருக்கும் விடுமுறை கிடையாது என அறிவிக்கப்பட்டுள்ளது. முறையான அனுமதி பெறாமல் யாரும் வெளியேறவும் தடை போடப்பட்டுள்ளது.

காஷ்மீர் பாலிடெக்னிக் கல்லூரி உள்ளிட்ட கல்லூரி விடுதிகளில் தங்கியுள்ள மாணவர்கள் உடனடியாக வெளியேறுமாறு உத்தர விடப்பட்டுள்ளது.

காஷ்மீருக்கு செல்ல வேண்டாம்என இங்கிலாந்து, ஜேர்மனி, ஆஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகளில் மக்களுக்கு ஆலோசனை கூறப்பட்டுள்ளது.

இதற்கிடையே காஷ்மீர் மாநிலத்தைமூன்றாகபிரித்து ஜம்மு தனி மாநிலமும், காஷ்மீர், லடாக் பகுதிகளை யூனியன் பிரதேசங்களா கவும் அறிவிக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளதாகவும், இது பற்றிய அறிவிப்பை பிரதமர் நரேந்திர மோடி இந்திய சுதந்திர தினத்தன்று (ஓகஸ்ட் 15) வெளியிட உள்ளார் எனவும் உறுதிப்படுத்தப்படாத தகவல்கள் கூறுகின்றன.



வெளியாள்கள் வேகமாக வெளியேற்றப்படுகின்றனர்

காஷ்மீரில் என்ன நடக்கிறது, எதற்காக இதுவெல்லாம் நடக்கிறது என்று புரிந்து கொள்ள முடியாமல் பொதுமக்கள் திண்டாடி வருகின்றனர்.

இந்த நிலையில் காஷ்மீர் மாநில ஆளுநர் சத்யபால் மாலிக்கை முன்னாள் முதலமைச்சரும், தேசிய மாநாட்டுக் கட்சித் தலைவருமான உமர் அப்துல்லா, கட்சியின் மூத்த தலைவர்களுடன் சென்று நேற்று முன்தினம் சந்தித்துப் பேசினார்.

இந்தச் சந்திப்பைத் தொடர்ந்து உமர் அப்துல்லா நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர், அரசியல் சாசன சட்டம் பிரிவு 370 மற்றும் 35 – ஏ ஆகியவற்றை ரத்து செய்வதற்கான எந்த திட்டமும் இல்லை. இதே போன்று மாநிலத்தை மூன்றாக பிரிக்கவும் எந்த யோசனையும் இல்லைஎன்று ஆளுநர் உறுதி அளித்தார். ஆனால் காஷ்மீரைப் பொறுத்தமட்டில் ஆளுநர் வார்த்தைகள் இறுதியானவை அல்ல. திங்கட்கிழமை இது குறித்து நாடாளுமன்றத்தில் மத்திய அரசு அறிவிக்க வேண்டும் எனக் கூறினார்.

காஷ்மீருக்கு வழங்கப்பட்டுள்ள சிறப்பு அந்தஸ்தை பறிக்கும் நடவடிக்கையில் மத்திய அரசு இறங்கினால், அதை எதிர்த்து அரசியல் ரீதியிலும், சட்ட ரீதியிலும் போராடுவோம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதே போன்று மற்றொரு முன்னாள் முதலமைச்சரான மெகபூபா, மக்கள் இயக்க தலைவர் ஷா பாசல், மக்கள் மாநாடு தலைவர் சாஜத் லோனே உள்ளிட்டோர் நேற்று முன்தினம் இரவு ஆளுநர் சத்யபால் மாலிக்கை சந்தித்துப் பேசியமை குறிப்பிடத்தக்கது. உமர் அப்துல்லா சந்திப்பை தொடர்ந்து, ஆளுநர் சத்யபால் மாலிக் ஓர் அறிக்கை வெளியிட்டார்.

அதில் அவர், காஷ்மீர் குறித்த அரசியல் சாசன விதிகளில் எந்த மாற்றத்தையும் செய்யப்போவது தொடர்பாக தகவல் எதுவும் வரவில்லை. பாதுகாப்பு காரணங்களையொட்டித்தான் படைகள் கூடுதலாகக் குவிக்கப்பட்டுள்ளன எனத் தெளிவுபடுத்தி உள்ளார்.


இருப்பினும் இன்று நாடாளுமன்றத்தில் காஷ்மீர் விவகாரம் பெரும் புயலைக் கிளப்பும் என எதிர்பார்க்கப்படுகிறது.



அத்தியாவசியப் பொருள்களை வாங்கி குவிப்பதற்காக கடைகள், பெற்றோல் நிலையங்களில் மக்கள் கூட்டம்

## காஷ்மீர் எல்லையில் கொல்லப்பட்ட

## பாக். வீரர்கள் எழுவரின் உடல்களை எடுத்துச் செல்ல இந்தியா அனுமதி!




ஜம்மு,ஒக.05
காஷ்மீர் எல்லையில் கொல்லப்பட்ட 7 பாகிஸ்தான் வீரர்களின் சடலங்களை எடுத்துச் செல்ல இந்திய இராணுவம் அனுமதி வழங்கியுள்ளது.

இந்திய எல்லைக்குள் கெரான் பிரிவில் ஊடுருவும் முயற்சியாக பாகிஸ்தானிய அதிரடிப் படையினர் ஈடுபட்டனர். அவர்களை இந்திய இராணுவம் பதிலடி கொடுத்து தடுத்தது. தொடர்ந்து இரு தரப்பினருக்கும்இடையே துப்பாக்கிச் சண்டை நடந்தது.

இதில், எல்லைக்குள் ஊடுருவ முயன்ற 7 பாகிஸ்தானிய அதிரடிப்படையினர் மற்றும் பயங்கரவாதிகளை இந்திய இராணுவம் சுட்டு வீழ்த்தியது. அவர்களின் சடலங்கள் எல்லை கட்டுப்பாட்டுக் கோட்டுப் பகுதியில் கிடக்கின்றன. தொடர்ந்து கடும் மோதலால் அவர்களின் உடல்களை இந்திய இராணுவம் கைப்பற்ற முடியவில்லை.

இந்த நிலையில், சுட்டு கொல்லப்பட்ட 7 பாகிஸ்தான் வீரர்களின் உடல்களை எடுத்துச் செல்ல இந்திய இராணுவம் அனுமதி வழங்கியுள்ளது. அவர்களது உடல்களை கொண்டு செல்ல முறைப்படி வெள்ளை கொடி ஏந்தி அணுகும்படியும் இராணுவம் அறிவுறுத்தியுள்ளது.

# அமெரிக்க இசை நட்சத்திரம் கெல்லிக்கு பாலியல் வழக்கில் பிணை வழங்க மறுப்பு

நியூயோர்க்,ஒக.05
அமெரிக்க இசைநட்சத்திரம் கெல்லிக்கு பிணை மறுக்கப் பட்டது.

அமெரிக்காவில் வசித்து வருபவர் இசை நட்சத்திரம் கெல்லி என்று அழைக்கப்படு கிற றொபர்ட் கெல்லி ஆவார். இவர் 'ஆர் அண்ட் பி' என்று அழைக்கப்படுகிற 'ரிதம் அண்ட் புளுஸ்' இசையில் பிரபலமா னவர்.



இவர் மீது ஏராளமான பாலி யல் முறைப்பாடுகள் குவிந்துள் ளன. பெண்களையும், சிறு மிகளையும் பாலியல் பலாத்கா ரம் செய்திருக்கிறார் என்பது தான் குற்றச்சாட்டு. இவர் எல்லா குற்றச்சாட்டுகளையும் மறுத்து வருகிறார்.

ஆனாலும் கடந்த மாதம் இவர் கைது செய்யப்பட்டு சிறை யில் அடைக்கப்பட்டார்.

சிகாகோ, புரூக்ளின் நீதி மன்றங்களில் கெல்லிக்கு எதிராக இரு குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டன. அவற் றில் கெல்லியும், அவரது கூட்டாளிகளும் சிறுமிகளை வேலைக்கு அமர்த்தி, கடத்திக் கொண்டு போய் பாலியல் பலாத்காரம் செய்ததுடன் ஆபாச படங்களும் எடுத்துள் ளனர் எனக் கூறப்பட்டுள்ளது.

வழக்குகளில் தொடர்புடைய சாட்சிகளை மிரட்டியும், பணம் கொடுத்தும் நீதித்துறை நட வடிக்கைக்கு ஊறு விளைவிக்க முயற்சித்தனர் எனவும் புகார் எழுந்துள்ளது.

கெல்லி சார்பில் புரூக்ளின் நீதிமன்றில் பிணை வழங்கக் கோரி மனு தாக்கலானது. மனுவை விசாரித்த நீதிபதி, அவருக்கு பிணை வழங்க மறுத்து உத்தரவிட்டார்.

# ஆப்கனில் அமைதி உடன்பாட்டுக்கு அமெரிக்கா - தலீபான்கள் இணக்கம்?

டோஹா,ஒக.05
ஆப்கானிஸ்தானில் அமைதி திரும்பும் வகையில், சமரச உடன்பாட்டுக்கு தலீபான்கள் தயாராகி வருகின்றனர் எனத் தகவல் வெளி யாகி உள்ளது.

ஆப்கானிஸ்தானில் 19 ஆண்டுகளாக நடந்து வருகிற போரை முடிவுக்குக் கொண்டு வருவதில் அமெரிக்கா முனைப்புக் காட்டி வருகிறது. இது தொடர்பாக தலீபான் அமைப் புடன் அமெரிக்கா நேரடிப் பேச்சு நடத்தி வரு கிறது.

**7 சுற்றுப் பேச்சுகள் முடிந்துள்ளன.**



8 ஆவது சுற்றுப் பேச்சில் பங்கேற்கக் கட்டார் நாட்டின் தலைநகர் டோஹா வந்து சேர்ந்துள்ள அமெரிக்க சிறப்பு பிரதிநிதி ஜல்மே கலீல் ஜாத் கூறுகையில் – உடன்பாட்டை ஏற்படுத்திக் கொள்ள தயார் என தலீபான்கள் சமிக்ஞை செய்துள்ளனர். நல்ல உடன்பாட்டுக்கு நாங்க ளும் தயார் என்றார்.

ஜல்மே கலீல் ஜாத் டுவிட்டரில் ஒரு பதிவு வெளியிட்டுள்ளார். அதில் அவர், ஆப்கானிஸ்தா னில் அமெரிக்கப் படைகளின் இருப்பு என்பது நிபந்தனை அடிப்படையிலானது. படைகளை திரும்பப் பெறுவதும் நிபந்தனை அடிப்படையி லானது எனக் குறிப்பிட்டுள்ளார்.

ஆப்கானிஸ்தானில் தலீபான்களுடன் சமரச உடன்பாடு ஏற்படுத்த வசதியாக அங்குள்ள 6 ஆயிரம் துருப்புகளையும் திரும்பப்பெற அமெ ரிக்காத் தயாராகி வருவதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

இதற்கிடையே வொஷிங்டன் வெள்ளை மாளிகையில் அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப், நிருபர்களிடம் பேசினார். அப்போது அவர் தலீபான்களுடன் நடத்துகிற பேச்சில் முன்னேற் றம் காணப்பட்டுள்ளதாக தெரிவித்தார். இதில் பாகிஸ்தான் தங்களுக்கு உதவும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

தலீபான்களுக்கும், அமெரிக்காவுக்கும் இடையே சமரச உடன்பாடு ஏற்பட்டு விட்டால், அது ஆப்கானிஸ்தானில் அமைதி திரும்பு வதற்கு வழி வகுக்கும்.



# இராணுவம் – எதிரணி சேர்ந்து சூடானில் இடைக்கால அரசு!

## உடன்பாடு எட்டப்பட்டுள்ளதாம்

கார்டூம்,ஒக.05
சூடானில் இடைக்கால அரசு அமைப்பதற் காக இராணுவக் கவுன்ஸிலும், எதிர்க்கட்சியும் உடன்பாடு செய்துள்ளன.

சூடானில் உமர் அல் பஷீர் அதிபராக இருந்து வந்தார். அவர் கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் அங்கு நெருக்கடி நிலையை அமல் படுத்தினார். இதை எதிர்த்து அங்கு போராட்டங்கள் மூண்டன. முடிவில் கடந்த ஏப்ரல் மாதம் இரா ணுவம் அவரது ஆட்சியைக் கவிழ்த்தது. இருப் பினும் கடந்த ஜூலை மாதம் இராணுவக் கவுன் ஸிலும், எதிர்க்கட்சிக் கூட்டணியும் அதிகார பகிர்வு ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்து போட் டன. அதன் விவரங்கள் தெரிய வரவில்லை.

இந்த நிலையில், புதிய இடைக்கால அரசை ஏற்படுத்த ஏற்ற வகையில் அரசியல் சாசன அறிவிப்பு வெளியிட இராணுவ கவுன்ஸிலும், எதிர்க்கட்சிக் கூட்டணியும் உடன்பாட்டை எட்டியுள்ளன. இதை ஆபிரிக்க கூட்டமைப்பின் மத்தியஸ்தர் முகமது ஹசன் லெபாட் தெரி வித்தார்.

இது தொடர்பாக அவர் நிருபர்களுக்கு பேட்டி அளிக்கையில் –

இது தொடர்பான வழிமுறைகளை வகுப் பதற்கு தொடர் கூட்டங்கள் நடத்தப்படும் – எனக் கூறினார்.

அதிகாரப் பகிர்வு தொடர்பான தகவல்கள் கசிந்துள்ளன. அதிகார பகிர்வு 39 மாதங்களுக்கு நடைமுறையில் இருக்கும். ஓர் ஆட்சிக் கவுன் ஸில், மந்திரிசபை, நாடாளுமன்றம் அமைக் கப்படும். ஜனநாயக ஆதரவு இயக்கத்தில் இருந்து ஒருவர் பிரதமர் பதவிக்கு வருவார். இராணுவம், உள்துறை மந்திரி பதவிகள் இரா ணுவத்துக்கு அளிக்கப்படும்.

# சிரிய ஆயுதக் களஞ்சியத்தில் வெடி விபத்து; 31 வீரர்கள் பலி!

சிரிய விமானப்படை தளத்தில் உள்ள ஆயுதக்கிடங்கில் ஏற்பட்ட வெடிவிபத்தில் 31 வீரர்கள் பலியாகினர்.


சிரியாவில் அரசுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்து வருபவர்கள் மீது அந்நாட்டு இராணுவம் தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகிறது. கடந்த ஏப்ரல் மாதம் முதல் சிரிய அரசுக்கு ஆதரவாக ரஷ்ய படைகளும் இணைந்து கிளர்ச்சி யாளர்கள் மீது தாக்கு தல் நடத்தி வருகின் றன.




2011ஆம் ஆண்டு முதல் சிரிய அரசுக் கும் கிளர்ச்சியாளர் களுக்கும் இடையே யான போரில் 37 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர் எனக் கூறப்படுகிறது. கிளர்ச்சியாளர்களை வான்வெளி தாக்குதல் மூலம் ஒடுக்கும் பணியில், சிரியாவின் ஹோம்ஸ் மாகாணத் தில் உள்ள ஷாய்ரத் (Shayrat) விமானப்படை தளம் முக்கிய மான ஒன்றாக கருதப்படுகிறது.

இங்கு தாக்குதலுக்கு பயன்படுத்தப்படும் வெடிபொருள்கள் மற்றும் பல்வேறு ஆயுதங்கள் சேமித்து வைக்கப்பட்டுள்ளன. இந்நிலையில், இந்த விமானப்படை தளத்தில் உள்ள ஆயுதக்கிடங்கில் ஏற்பட்ட வெடிவிபத்தில் 31 வீரர்கள் பலியாகினர் எனவும் பலர் படுகாயம் அடைந்துள்ளனர் எனவும் சிரிய மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

அங்கு காலாவதியான வெடிப்பொருள்கள் மற்றும் ஆயு தங்களை அகற்றும் பணியில் வீரர்கள் ஈடுபட்டிருந்த போது இந்த விபத்து நடைபெற்றதாகக் கூறப்படுகிறது.



# டெக்ஸாஸில் துப்பாக்கிச் சூடு; இருபது பேர் உயிரிழப்பு 26 பேருக்குப் படுகாயம்!

எல் பேஸோ,ஒக.05
அமெரிக்காவின் டெக்ஸாஸில் உள்ள எல் பேஸோ நகரில் அமைந்த வணிக வளாகம் ஒன்றில் திடீரென கண்மூடித் தனமாக துப்பாக்கிச் சூடு நடத்தப்பட் டது. இதில் 20 பேர் பலியானார்கள். 26 பேர் படுகாயமடைந்து உள்ளனர்.



இந்த மோசமான நடவடிக்கையில் பேட்ரிக் கிரஸ்சியஸ் (வயது 21) என்ற நபர் ஈடுபட்டு உள்ளார். எனினும், சந்தேகத்திற்குரிய 3 நபர்களை கைது செய்திருக்கிறோம் என மேயர் டீ மார்கோ கூறியுள்ளார்.

அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் நியூ ஜெர்ஸியில் உள்ள கோல்ப் கிளப்பில் வார விடுமுறை யைக் கழித்து வருகிறார். அவரிடம் இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டது. இந்த சம்பவத்திற்கு இரங்கல் தெரிவித்துள்ள டிரம்ப், கண் டனமும் வெளியிட்டுள் ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை மிஸ்ஸிஸிப்பியில் வணிக வளாகம் ஒன்றில் நடந்த துப்பாக்கிச்சூட்டுச்சம்பவத் தில் 2 பேர் கொல்லப்பட் டனர். பொலிஸ் அதிகாரி ஒருவர் காய மடைந்தார். இதேபோன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை வடக்கு கலிபோர்னி யாவில் உணவு திருவிழா ஒன்றில் 19 வயது நபர் ஒருவர் நடத்திய துப்பாக்கி சூட்டுச் சம்பவத்தில் 2 குழந்தைகள் உள்பட 3 பேர் பலியானார்கள்.

# பிலிப்பீன்ஸில் பயணிகள் படகு கவிழ்ந்ததில் 7 பேர் உயிரிழப்பு

பிலிப்பீன்ஸ் நாட்டில், கடல் அலையில் சிக்கி 7 பேர் உயி ரிழந்திருக்கலாம் என அஞ்சப் படுகிறது.

பிலிப்பீன்ஸில் கடந்த சில நாள்களாகக்கனமழைகொட்டித் தீர்த்து வருகிறது. அண்மை யில், அங்குள்ள ஒரு தீவிலி ருந்து மற்றொரு தீவுக்கு படகு களில் 38 பேர் பயணம் மேற் கொண்டனர். அப்போது, மழை மற்றும் கடல் கொந்தளிப் பால் படகு கவிழ்ந்தது.

நீரில் தத்தளித்தவர்களை பார்த்த கடலோரக் காவல் படை யினர், உடனடியாக மீட்பு படகு களில் சென்று மீட்டுக் கரை சேர்த்தனர்.

இந்த கோர விபத்திலிருந்து 31 பேர் மீட்கப்பட்ட நிலையில், படகுகளில் பயணித்த 6 பெண்கள் உள்ளிட்ட 7 பேரின் நிலை இன் னும் தெரியவில்லை. அவர்கள் இறந்திருக் கலாம் என அஞ்சப் படுகிறது பொலிஸார் தீவிர தேடுதல் பணி யில் ஈடுபட்டுள்ளனர்.



காலைக்கதிர் Kalaikathir



# குடியிருக்க எனக்கூறி வாங்கிய வீட்டில் கூடாரம் அமைத்து மத போதனை!

– பொதுமக்கள் திரண்டு எதிர்ப்பு –





வட்டுக்கோட்டை, ஒக. 05

பொன்னாலை – மூளாய் எல்லையில், குடும்பம் ஒன்றுக்கு வழங்கப்பட்ட இந்திய வீடு ஒன்றை விலைக்கு வாங்கிய கிறிஸ்தவ சபை ஒன்றின் போதகர் அங்கு கிறிஸ்தவ மத போதனை நடத்தி வருகின்றார். இதற்கு அப்பகுதி மக்கள் கடும் எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர்.

மேற்படி பிரதேசத்தில் குடும்பம் ஒன்றுக்கு இந்திய வீட்டுத்திட்ட வீடு வழங்கப்பட்டிருந்தது. குறித்த வீட்டினை அக்குடும்பம் கிறிஸ்தவ மத போதகர் ஒருவருக்கு விற்பனை செய்துவிட்டு அந்த இடத்தை விட்டு வெளியேறி வேறிடத்தில் வசிக்கின்றது.

குடியிருப்பதற்கு எனக்கூறி அந்த வீட்டினை வாங்கிய கிறிஸ்தவ சபையின் போதகர் அந்த வீட்டிற்கு முன்பாக பெரும் கூடாரம் ஒன்றை அமைத்துள்ளார். அங்கு கிறிஸ்தவ மத போதனைகள் இடம்பெற்று வருகின்றன.

இங்கு தூண்கள் எழுப்பப்பட்டு கூடாரம் அமைப்பதற்கு பிரதேச சபையில் எந்தவித அனுமதியும் பெறப்பட்டிருக்கவில்லை. இது குறித்து அப்பகுதி மக்கள் பிரதேச சபையின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளனர்.

முற்றுமுழுதாக சைவ மக்கள் வாழும் சூழலில், அவர்களின் எதிர்ப்புக்கு மத்தியில் வெளி இடங்களில் இருந்து ஆள்களைக் கொண்டுவந்து மதக்கூட்டம் மற்றும் மத போதனைகள் நடத்தப்பட்டு வருகின்றன. இதற்கு எதிர்ப்பு வெளியிட்டுள்ள மக்கள் நேற்று இது தொடர்பாக மூளாய் கிராம சேவையாளரின் கவனத்திற்கு கொண்டுவந்தனர்.

சம்பவ இடத்திற்குச் சென்ற கிராம சேவையாளர் குறித்த மத போதகருடன் கலந்துரையாடினார். இந்த விடயத்தை தான் பிரதேச செயலாளரின் கவனத்திற்கு கொண்டுசெல்வார் என அவர் கூறினார்.

இந்த வீட்டில் கிறிஸ்தவ மதபோதனைகள் இடம்பெறுவதை உடனடியாக தடுத்து நிறுத்த வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ள மக்கள், இந்திய வீடு விற்பனை செய்யப்பட்டமைக்கும் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

யாழ். குடாநாட்டில் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் வீடுகள் இல்லாமல் தவிக்கின்ற நிலையில் இந்திய வீடுகளைப் பெற்றவர்கள் அவற்றை மதமாற்ற சபைகளுக்கு விற்பனை செய்கின்றமை எந்த வகையில் ஏற்றுக்கொள்ளக்கூடியது எனவும் அவர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

இதேவேளை, கிறிஸ்தவ மதபோதனைகள் நடைபெறும் இடங்களுக்கு அனுமதி வழங்குவதாயின் அப்பகுதியில் உள்ள மக்களின் கருத்துக்களை அறியாமல் அனுமதி வழங்க வேண்டாம் என மூளாய் – பொன்னாலை மக்கள் அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முற்றுமுழுதாக சைவ மக்கள் வாழும் சூழலில் கிறிஸ்தவ மத போதனைகள் ஏன் எனக் கேள்வி எழுப்பியுள்ள மேற்படி மக்கள், இது திட்டமிட்ட மத மாற்ற செயற்பாடு எனவும் கூறியுள்ளனர். இவ்வாவாறான செயற்பாடுகளை தாங்கள் முற்றுமுழுதாக எதிர்ப்பதாகக் கூறியுள்ள அவர்கள், இந்த விடயத்தில் அதிகாரிகள் அதிக சிரத்தை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர்.



# நல்லூர்க் கந்தன் பெருந்திருவிழாவுக்கு நாங்கள் ஆயத்தமாவோம்!

சைவத் தமிழர்களின்வரலாற்று திருக்கோவிலாகிய நல்லூர்க் கந்தன் பெருந் திருவிழா 06 - 02 - 2013 செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகின்றது. யாழ் குடாநாடே நல்லூரான் திருவிழாவுக்காக புனிதம் பேணும் காலம் நெருங்கிவிட்டது. தமிழ் வேந்தர்கள் இராஜதானியாக ஆட்சிசெய்த நல்லூர்ப் பதிக்கு தனித்துவம் உண்டு. நல்லூர் திருவிழா எப்போது வருமென அனைவரும் காத்திருக்கும் அற்புத திருநாள் அண்மித்து வந்து விட்டது.

நல்லைக் கந்தன் வீதியெங்கும் சேவற்கொடிகள் பறக்கத் தொடங்கிவிட்டன. விடிவுதரும் வேலவனின் செய்தி கூறும் சேவற்கொடிகள் வாருங்கள்! வாருங்கள்! என்று அழைக்கின்றன. எல்லாத் திசையும் தாகசாந்தி நிலையங்கள். அன்னதான மடங்கள் ஆயத்தமாகி விட்டன. நல்லூர்க் கந்தனிடம் காஞ்சி வழக்கம் போல் மாட்டுவண்டியில் கொண்டு சென்று கொடிச் சீலையை உபயகாரரிடம் கையளித்து விட்டார்கள். யாழ்ப்பாண மாநகரசபை இரவு பகல் நல்லூராரைப் புனிதப்படுத்த தயாராகி விட்டது. நல்லூரான் திருக் கோயில் உள்ளும் புறமும் வர்ணங்கள் தீட்டப்பட்டு அடியார்கள் ஆனந்தம் கொள்ள, ஆரவாரமாக கோவில் பணியாளர்கள் தம்கடன் செய்கிறார்கள், நல்லூர் சுற்றாடல் சுறுசுறுப்பாகிவிட்டது. ஊர்தோறும் நல்லூரான் விரதத்திற்காக வீடுகளை சுத்தம் செய்யத் தொடங்கி விட்டார்கள். இருபத்தைந்து நாள்களும் எல்லாம் மறந்த நலத்தைப் பெறுவதற்காக பக்தர்கள் ஆவலோடு காத்திருக்கிறார்கள்,

நல்லூரான் கொடியேறிவிட்டால் அதிகாலை 4.00 மணிக்கு அரோகரா! அரோகரா! என்ற வார்த்தை ஓங்கிஒலிக்கும். ஏராளமான இளைஞர்கள் அங்கப்பிரதட்சணம் செய்யும் அழகு சொல்லில் வடிக்கமுடியாது. அடியழித்துக் கும்பிடும் அன்புச் சகோதரிகள் அணியணியாக வரப்போகிறார்கள். 'கைதான் நெகிழவிடேன் ஐயனே உன் முகம் பார்க்க வேண்டும்' என முண்டியடித்து நெருங்கி வீழ்ந்து எழும் பக்தர்கள் ஆயத்தமாகி விடுவார்கள். அலங்காரக் கந்தன் எத்தனை விதமான அலங்காரங்களோடு காலையும் மாலையும் எதிர் வருவோம். தடையின் அழகில் இருந்து குருக்களின் உடையழகு வரை பேசாதவர்கள் இல்லை . அப்பப்பா! என்ன அவகாரம்?

எப்படி இந்தக் கோயிலை யார் நடத்துகிறார்கள் என்று தெரியாமலே எஜமானர் வழிநடத்துகிறார். இது என்ன அதிசயம்! எங்கோ ஒரு மூலையில் நின்று தந்தையும் மைந்தனும் மணிக்கூடு ஓடுமுன் நல்லூர் நேரம் தவறாமல் காப்பதன் விந்தைதான் என்ன? இப்படி பல சம்பாஷணை செய்வார்கள். நல்லூரான் தேரை மினுக்கத் தொடங்கி விடுவார்கள் சில தொண்டர்கள். வானுயர்ந்த சப்பரத்தை ஓரிரு வாரங்களிலே கட்டத் தொடங்கி விடுவார்கள். வேத பாராயணமும், நாத அர்ப்பணமும், முருகா! முருகா! என்ற ஓயாத ஓசையும் இனி கேட்டுக்கொண்டே இருக்கலாம்.

நல்லூர் வீதியில் மண்ணில் விளையாடுவதற்கு மழலைகள் காத்திருப்பார்கள். குகை கட்டி ரசிப்பார்கள். பூனைக்கிடங்கு விளையாட்டு என்று மண்ணுக்குள் பாதை அமைத்து கூட்டமாக விளையாடி மகிழ்வார்கள். வாசல் தரையில் மணலைத்தடவி ஈரமண்ணில் இறைவடிவங்களை உருவாக்கி தமது வித்தைகளைக் காட்டுவார்கள், கிளறிய வீதியெல்லாம் கிடுகிடு என்று சரிசெய்து தண்ணீர் தெளித்து, விடிந்தால் மீண்டும் வீதி தயாராகிவிடும். மண்டபங்களில் நற்சிந்தனைகளும் பாட்டுக் கச்சேரிகளும் அரங்க நிகழ்ச்சிகள் பலவும் இனி ஆரவாரமாக இருக்கும். கலைஞர்கள் இடையே கர்வப் போட்டிகளும் தொடங்கும். காவடிகள், கரகாட்டாங்கள். தீப்பந்த ஆட்டங்கள் என கண்களைப் பறிப்பதற்கு பல விடயங்கள் எங்களை நோக்கி வரும்,

இந்திரலோகம்போல் நல்லூரானின் திருவிழாக்காலம் மாற்றம் காணலாம், இந்த இனிய காட்சியைக் காணும் பேறு பெற்றவர்கள் பாக்கிய சாலிகள். நல்லூரரானின் மகோற்சவ! இருபத்தைந்து நாட்களும் எமக்கு கிடைத்த தவப்பொழுது. எவ்வளவோ நேரங்களை அவப்பொழுதாக கழிப்பவர்கள் நாங்கள். இந்த இனிய தவப்பொழுதை குடும்பம் குடும்பமாக சந்திக்கத் தயாராகுவோம், சைவர். தமிழர்கனே நல்லூர்த் திருவிழா நமது பண்பாட்டின் திருவிழா. எங்கள் பாரம்பரியத்தின் பெருவிழா.

இத்திருநாள்களை இறைவன் தந்த வரப்பிரசாதமாகக் கொள்ளுங்கள். அலங்காரமாக வாருங்கள். அநாகரிகமாக வராதீர்கள். எங்கள் ஆடை கலாசாரத்தின் அர்த்தத்தை உணர்ந்து கோவில் வழிபாட்டிற்குரிய பண்பாட்டு உடைகளோடு ஆண்களும் பெண்களும் அவதானமாக வாருங்கள். வேடிக்கைகளைத் தவிர்த்துக்கொள்ளுங்கள். நவநாகரிக ஆடை அணிகலன்களை திருவிழாக் காலத்தில் நீங்களும் அணியாதீர்கள், உங்கள் உறவுகளையும் அணியவிடாதீர்கள், ஆலய வீதிகளில் அருள்வார்த்தைகளைப் பேசுங்கள்.

நல்லூரில் புதிய உறவுகள். நட்புக்கள் அறிமுகங்கள் அனைவருக்கும் கிடைப்பது வழக்கம். அடியார்கள் இறைபதத்தையும் உளப்பலத்தையும் பெருங்கே பெறுகின்ற காலம். இந்த உத்தம காலத்தை யாரும் உதாசீனம் செய்யாதீர்கள். இளைஞர்களே! இனிதாக வாருங்கள். நல்லூரில் உங்கள் பக்தியைக் கண்டு நாம் பெருமை கொள்வோம். நீங்கள் இருக்க எங்களுக்கு என்ன பயம் என்று ஆறுதல் கொள்வோம், அந்த நம்பிக்கையில் காத்திருங்கள். நல்லூர் சுற்றாடலில் வாணிபம் செய்ய வருபவர்களே! வாருங்கள், வாழ்க்கையாளர்களின் வாழ்வுக்கு உகந்த பொருள்களை வண்ண முறக் கையளிப்படங்கள். வாணிபத்திற்கா! நல்லூரான் சுற்றாடலின் புனிதத்தை பேணத்தவறாதீர்கள். நல்லூர் சூழலுக்கு அப்பாலுள்ள மதுபானசாலைகளும், மாமிச உணவகங்களும் மௌனித்தல் அவசியமாகும்.

கருனைத் தெய்வமே நல்லைக் கந்தா! உன்னை வணங்குபவர்களுக்கு உன் வடிவழகை கண்ணாரக் காண்பதற்கு ஓடோடி வரப்போகிறோம். பாதுகாப்பின் பேரால் நாங்கள் பயமுறாமல் அச்சம் தவிர்த்து ஆனந்தமாய் உன்னைக் காண வீதிகள் அகலத் திறக்கட்டும். பக்தர்கள் வில்லங்கம் இல்லாமல் உன்னைக்காண வருவதற்க, வேலவனே நீ வழி செய்ய வேண்டும். ஊடகங்களே! ஊரெல்லாம் திரண்டு நல்லூரான் காற்றை சுவாசிக்க நல்ல செய்திகளைப் பரப்புங்கள். நல்லதே நடக்கட்டும்! நல்லூரான தஞ்சம்!



செஞ்சொற்செல்வர்
கலாநிதி
ஆறு. திருமுருகன்.

# யாழ்ப்பாணம், அம்பாறை மாவட்டங்களில் வேலையற்ற பட்டதாரிகள் போராட்டங்கள்








**யாழ்ப்பாணம், ஓக. 05**

**வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தினரால் யாழ்ப்பாணம் மற்றும் அம்பாறை மாவட்டங்களில் நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.**

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகம் முன்பாகவும் காரைதீவு விபுலானந்தம் சதுக்க முன்றிலிலும் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை இந்தப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

இதில் வெளிவாரிப் பட்டதாரிகளைப் புறக்கணிக்காதே, அரச நியமனத்தில் பட்டதாரிகளுக்கு உள்வாரி, வெளிவாரி என பாகுபாடு காட்டாதே உட்பட பதாகைகளை அடங்கிய சொற்களை ஏந்தியவாறும் பட்டதாரிகள் கவனவீர்ப்பில் ஈடுபட்டனர்.

மேலும் தங்களுக்கான நியமனங்களை விரைவாக வழங்கக் கோரியும் பட்டதாரிகளுக்குப் பாகுபாடு காட்டாமல் இந்த ஆளும் அரசு நியமனங்களை வழங்க வேண்டும் எனக் கவனவீர்ப்பில் ஈடுபட்டோர் தெரிவித்தனர்.

இதில் ஆண், பெண் வெளிவாரி பட்டதாரிகள், உயர்தேசிய டிப்ளோமாதாரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு தங்களது கோசங்களை எழுப்பியிருந்தனர்.

அம்பாறை பட்டதாரிகள் சிறிது தூரம் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து ஊர்வலமாகச் சென்றனர். (ஐ)



## யாழ்.பஸ் நிலையத்தில் மோதல் படுகாயமடைந்தார் நடத்துநர்

யாழ்ப்பாணம், ஓக. 05

யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்தில் இரு தரப்புகளுக்கு இடையே இடம்பெற்ற மோதலையடுத்து நடத்துநர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவத்தையடுத்து தாக்குதலை நடத்திய கும்பலைச் சேர்ந்த மூவர் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன் தினம் சனிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் இடம்பெற்றது.

பஸ் நிலையத்துக்குள் அழகுசாதனப் பொருள்களை விற்பனை செய்பவர் சிலர் தமது வாகனத்தை பேருந்து நிலையத்துக்குள் கொண்டு செல்ல முற்பட்டனர். அதற்கு பாதுகாப்பு உத்தியோகத்தர் அனுமதிக்கவில்லை.

அதனால் பாதுகாப்பு உத்தியோகத்தருக்கும் அவர்களுக்கும் இடையே வாய்த்தர்க்கம் ஏற்பட்டது. அதனையடுத்து அங்கு கூடிய இ.போ.ச. சாரதிகள், நடத்துநர்கள் பாதுகாப்பு உத்தியோகத்தருக்கு ஆதரவாக நின்றனர்.

அதனால் வியாபாரிகள் சிலர் மற்றும் முச்சக்கர வண்டிச் சாரதி ஒருவரும் சேர்ந்து கடைகளுக்குள் இருந்த கம்பிகள், கத்தரிக்கோல் உள்ளிட்டவற்றை எடுத்து வந்து பாதுகாப்பு உத்தியோகத்தரையும் நடத்துநரையும் கண்மூடித்தனமாகத் தாக்கினர்.

சம்பவத்தையடுத்து படுகாயமடைந்த நடத்துனர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். தாக்குதலை நடத்திய மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். விசாரணைகள் தொடர்கின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## பலாலியில் இருந்து விமான சேவை; வான் போக்குவரத்து சங்கம் அனுமதி

யாழ்ப்பாணம், ஓக. 05

பலாலி விமான நிலையத்தில் இருந்து சர்வதேச விமானங்களை இயக்குவதற்கு சர்வதேச வான் போக்குவரத்துச் சங்கம் (IATA) அனுமதி அளித்துள்ளது என சிவில் விமான சேவை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பலாலி விமான நிலையம், யாழ்ப்பாணம், காங்கேசன்துறை விமான நிலையம் என்றே சர்வதேச விமான சேவைப் பதிவுகளில் இடம்பெற்றுள்ளது.

தென்னிந்திய நகரங்களுக்கு விமான சேவைகளை ஆரம்பிக்கும் நோக்கில் பலாலி விமான நிலையத்தை பிராந்திய விமான நிலையமாக தரமுயர்த்தும் நடவடிக்கைகள் அவசர அவசரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அடுத்தமாதம். பலாலியில் இருந்து தென்னிந்தியாவுக்கு விமான சேவைகளை ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளதாக அரச வட்டாரங்கள் கூறுகின்றன.

இந்தநிலையில், வெளிநாடுகளுக்கான விமான சேவைகளை பலாலி விமான நிலையத்தில் இருந்து மேற்கொள்வதற்கு, சர்வதேச வான் போக்குவரத்து சங்கத்திடம் (IATA) இலங்கை அரசு அனுமதி பெற்றுள்ளது.

பலாலி விமான நிலையத்தில் இருந்து சர்வதேச விமானங்களை இயக்குவதற்கு, அனுமதி அளித்துள்ள சர்வதேச வான் போக்குவரத்துச் சங்கம், பலாலி விமான நிலையத்துக்கான தனித்துவமான குறியீட்டான JAF என்பதையும் வழங்கியுள்ளது. (ஐ)

# இலங்கைத் தாக்குதல்களுடன் மாலைதீவின் முன்னாள் துணை ஜனாதிபதிக்கு தொடர்பா?

படகு ஒன்றில் செல்லும்போது தமிழகம் தூத்துக்குடியில் கைது செய்யப்பட்ட மாலைதீவின் முன்னாள் துணை ஜனாதிபதி அஹ்ம்மத் ஆதீப் தூத்துக்குடி வந்து சில தினங்கள் தங்கியிருந்துவிட்டுப் பின்னர் இலங்கைக்குத் தப்பி வர திட்டமிட்டிருந்தமை முதல்கட்ட விசாரணையில் தெரிய வந்திருக்கிறது .

இதற்குத் தூத்துக்குடியில் உள்ள சிலர் உதவ சம்மதித்திருக்கிறார்கள். தூத்துக்குடியில் இருந்து ராமேஸ்வரம் சென்று அந்த வழியாக இலங்கைக்குள் ஊடுருவும் திட்டத்தைத் தமிழக கடலோரக் காவல்படையினர் முறியடித்திருக்கிறார்கள்.

இலங்கையில் சில மாதங்களுக்கு முன்பு குண்டுவெடிப்புச் சம்பவம் நடைபெற்ற நிலையில், மாலைதீவு முன்னாள் துணை ஜனாதிபதி இங்கு வர திட்டமிட்டிருந்தமை தற்செயலானதா அல்லது அவருக்கு ஐ.எஸ். தீவிரவாத அமைப்பினருடன் தொடர்பு இருக்கிறதா என்பது குறித்து இந்திய மத்திய உளவுப்படையினர் தீவிரமாக ஆராய்ந்து வருகின்றனர்.

தமிழகம் மற்றும் கேரளாவைச் சேர்ந்த சிலர் ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாத அமைப்புடன் தொடர்பில் இருப்பதாக எழுந்த சந்தேகத்தையடுத்து இந்திய தேசியப் புலனாய்வு முகமையான என்.ஐ.ஏ தீவிரக் கண்காணிப்பில் ஈடுபட்டு வருகிறது. கேரளாவின் கொச்சி நகரில் சில மாதங்களுக்கு முன்பு 6 இளைஞர்கள் ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பின் ஆதரவாளர்கள் என்கிற சந்தேகத்தில் கைது செய்யப்பட்டனர்.

ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புடன் தொடர்பில் இருப்பதாக ஒகஸ்ட் 2ஆம் திகதி அபு பஷிர் என்ற 29 வயது இளைஞர் கைது செய்யப்பட்டார். அவர் கொடுத்த தகவலின் அடிப்படையில் சென்னையைச் சேர்ந்த ஷாலி முகமது என்பவரையும் நெல்லை மாவட்டம் கடைய நல்லூரைச் சேர்ந்த சுபான் அப்துல்லா என்பவரையும் என்.ஐ.ஏ அதிகாரிகள் கைது செய்தனர்.

இந்தப் பின்னணியில் மாலைதீவின் முன்னாள் துணை ஜனாதிபதி இலங்கை வர திட்டமிட்டிருந்தமை தற்செயலானதா அல்லது அவருக்கு தீவிரவாத இயக்கங்களுடன் தொடர்பு உள்ளதா என விசாரணை நடக்கிறது.

தூத்துக்குடி, கொச்சி துறைமுகங்களில் என்.ஐ.ஏ அதிகாரிகள் தீவிர கண்காணிப்பில் இருக்கும் நிலையில் முன்னாள் துணை ஜனாதிபதி ஆதீப் தூத்துக்குடி வழியாகத் தமிழகத்துக்குள் ஊடுருவ முயன்ற சம்பவம் இந்திய மத்திய உளவுத்துறையினரை அதிர்ச்சி அடைய வைத்திருக்கிறது.

அதனால், தூத்துக்குடியில் அவருக்கு அடைக்கலம் கொடுக்க முன்வந்த நபர்கள் குறித்த விசாரணை தொடங்கப்பட்டுள்ளது. (ஐ)

# மேற்கிந்திய தீவுகள் அணியுடன் போராடி வென்றது இந்திய அணி!




இந்தியா மற்றும் மேற்கிந்திய தீவுகள் அணிகளுக்கு இடையிலான முதல் 'ருவென்டி 20' போட்டியில் இந்திய அணி நான்கு விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது.

அமெரிக்கா மற்றும் மேற்கிந்திய தீவுகளுக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி, அங்கு மூன்று 'ருவென்டி 20' போட்டிகள், மூன்று ஒருநாள் போட்டிகள், இரண்டு டெஸ்ட் போட்டிகளில் விளையாடவுள்ளது.

இந்தத் தொடரின் முதல் 'ருவென்டி 20' போட்டி அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தில் உள்ள லாடர்ஹில் மைதானத்தில் இடம்பெற்றது.

இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணி முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தது.

அதன்படி களமிறங்கிய மேற்கிந்திய தீவுகள் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் இருவரும் ஓட்டம் எதனையும் பெறாமல் ஆட்டமிழந்தனர்.

தொடர்ந்தும் இந்திய அணியின் பந்துவீச்சை தாக்கு பிடிக்க முடியாமல் அந்த அணி, 20 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 95 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

கிரோன் பொலாா்ட் அதிகபட்சமாக 49 ஓட்டங்களை அணிக்காகப் பெற்றுக்கொடுத்தார்.

இந்திய தரப்பில் பந்துவீச்சில் சைனி 3 விக்கெட்டுக்களையும், புவனேஸ்வர் குமார் 2 விக்கெட்டுக்களையும், வாசிங்டன் சுந்தர், கலில் அகமது, குருணால் பாண்டியா ஆகியோர் தலா 1 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

இலகுவான இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய இந்திய அணி சற்று தடுமாறி, 17.2 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி பெற்றது. இந்த வெற்றியுடன் இந்திய அணி, தொடரில் 1 – 0 என முன்னிலை வகிக்கின்றது.

போட்டியின் நாயகனாக, தனது அறிமுகப் போட்டியில் விளையாடிய 23 வயதான நவ்தீப் சைனி தெரிவு செய்யப்பட்டார்.

ருவென்டி 20 தொடரின் அடுத்த போட்டியும் அமெரிக்காவின் இதே மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

## டில்சானின் சாதனையை முறியடித்தார் கோஹ்லி!

மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிரான முதலாவது 'ருவென்டி' 20 போட்டியில் ஒரு பௌண்டரியைப் பெற்றுக் கொண்டதன் மூலம், இலங்கையின் முன்னாள் துடுப்பாட்ட வீரர் திலகரத்ன டில்சானின் சாதனையை கோஹ்லி முறியடித்துள்ளார்.

அமெரிக்கா மற்றும் மேற்கிந்திய தீவுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி, நேற்று முன் தினம் முதல் 'ருவென்டி 20' போட்டியை அமெரிக்காவில் எதிர்கொண்டது.

இதில் நான்கு விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் மேற்கிந்திய தீவுகள் அணியை இந்திய அணி தோற்கடித்தது.

இந்தப் போட்டியில், 19 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்ட இந்திய அணித்தலைவர் விராட் கோலி, ஒரு பௌண்டரியைப் பெற்றதன் மூலம் இலங்கையின் முன்னாள் துடுப்பாட்ட வீரர் திலகரத்ன டில்சானின் சாதனையை முறியடித்துள்ளார்.

ருவென்டி 20 சர்வதேச கிரிக்கெட் வரலாற்றில் 2006ஆம் ஆண்டு அறிமுகம் பெற்ற இலங்கையின் திலகரத்ன டில்சான் 80 போட்டிகளில் விளையாடி 1,889 ஓட்டங்களைக் குவித்துள்ளார்.

இதில் 223 பவுண்டரிகளுடன் கடந்த 2016ஆம் ஆண்டு கிரிக்கெட் வாழ்க்கையிலிருந்து ஓய்வு பெற்றிருந்தார்.

அன்றிலிருந்து டில்சான் பெற்றுக்கொண்ட பௌண்டரிகளே ருவென்டி 20 சர்வதேச அரங்கில் தனிநபர் பெற்றுக்கொண்ட அதிக பௌண்டரிகளாகக் காணப்பட்டது.

ஆனால், தற்போது விராட் கோஹ்லி குறித்த சாதனையை மூன்று வருடங்களின் பின்னர் முறியடித்துள்ளார்.

கடந்த 2010ஆம் ஆண்டு ருவென்டி 20 சர்வதேச அறிமுகம் பெற்ற விராட் கோஹ்லி இது வரையில் 68 போட்டிகளில் 224 பௌண்டரி களை குவித்து இவ்வாறு டில்சானின் சாதனையை முறியடித்து ருவென்டி 20 சர்வதேச அரங்கில் அதிக பௌண்டரிகளைப் பெற்ற வீரராக மாறியுள்ளார்.

இந்தப் பட்டியலில் இலங்கை வீரர்கள் வரிசையில், டில்சானுக்கு அடுத்ததாக 55 போட்டிகளில் விளையாடியுள்ள மஹேல ஜெயவர்தன 173 பௌண்டரிகளுடன் 12ஆவது இடத்தில் காணப்படுகின்றார். மஹேலவை தொடர்ந்து 139 பௌண்டரிகளுடன் 23ஆவது இடத்தில் குமார் சங்கக்கார காணப்படுகின்றார்.

# மெஸ்ஸிக்கு எதிராக வழங்கப்பட்ட தீர்ப்பு

நடைபெற்று முடிந்த கோபா அமெரிக்க தொடரில் சிலி அணிக்கெதிராக ஆர்ஜென்டீனா மோதிய போட்டியில் நட்சத்திர வீரர் மெஸ்ஸி சிவப்பு அட்டை பெற்று வெளியேறியிருந்தார்.

இதன் பின்னர் தொடரின் 03ஆம் இடத்துக்கான போட்டியில் வென்ற ஆர்ஜென்டீனா அணியினர் பதக்கம் பெற அழைக்கப்பட்ட போது மெஸ்ஸி இதனை நிராகரித்திருந்தார். அத்துடன் ஊடகங்களுக்குப் பேட்டி வழங்கிய போது நடுவர்கள் மற்றும் சம்மேளனம் மீது கடுமையான விமர்சனங்களையும் வெளியிட்டார்.

இதனை தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பதிவேற்றியிருந்தமை சான்றாகும்.

எனவே இதற்கான ஒழுக்காற்று நடவடிக்கை தொடர்பான இறுதி முடிவை தென்னமெரிக்க கால்பந்தாட்ட சம்மேளனம் வெளியிட்டுள்ளது.

இதன்படி 03:08:2019 தொடக்கம் 90 நாள்கள் வரை மெஸ்ஸி தனது தேசிய அணிக்காக விளையாட தடை விதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஆர்ஜென்டீனா அணியினர் 50,000 டொலர்களையும் தண்டமாக செலுத்துமாறும் பணிக்கப்பட்டுள்ளனர்.

லயனஸ் மெஸ்ஸி தனக்கு விதிக்கப்பட்டுள்ள தடை காலத்தில் தேசிய அணிக்கான 03 போட்டிகளையே இழக்கவுள்ளார்.

மெக்சிக்கோ, சிலி, ஜேர்மனி ஆகிய அணிகளுடன் நடைபெறவுள்ள நட்புறவு போட்டிகளையே மெஸ்ஸி இழக்கவுள்ளார்.

2022 ஆண்டு நடைபெறவுள்ள உலகக் கிண்ணத் தகுதிப் போட்டியில் மெஸ்ஸி பங்கேற்க முடியும் சிவப்பு அட்டை காண்பிக்கப்பட்டதால் முதல் போட்டியில் பங்குபெற முடியாது.

இத் தீர்ப்பை எதிர்த்து மேல் முறையீடு செய்ய மெஸ்ஸிக்கு 07 நாள்கள் உள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.



# இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது இளவாலை யங்கென்றீஸ் அணி



வலிகாமம் லீக்கின் அனுசரணையோடு இணுவில் கலாஜோதி வி.க நடாத்தும் அமரர் அப்புத்துரை தம்பிராஜா ஞாபகார்த்தமாக நடைபெறும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் நடைபெற்ற அரையிறுதி ஆட்டம் ஒன்றில் இளவாலை யங்கென்றீஸ் அணியை எதிர்த்து இளவாலை சென்.லூட்ஸ் அணி மோதியது.

ஆட்ட நேர முடிவில் 03:01 என்ற கோல் கணக்கில் யங்கென்றீஸ் அணி வெற்றி பெற்று இறுதி சுற்றுக்கு தகுதி பெற்றது.

யங்கென்றீஸ் அணி சார்பாக ரூபன்ராஜ் , இக்னி , டிலுக்சன் ஆகியோர் தலா ஒரு கோல் களையும் மற்றும் லூட்ஸ் அணி சார்பாக ரமேஸ் ஒரு கோலையும் பெற்றுக் கொடுத்தனர்.

# லீக் ஆட்டத்தில் வென்றது நாவற்குழி அன்னை அணி

யாழ் லீக்கின் அனுசரணையில் உரும்பிராய் திருக்குமரன் அணியின் முன்னாள் வீரர் சோபநாத் ஞாபகார்த்தமாக நடத்தப்படும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் நேற்று முன் தினம் நடைபெற்ற சூப்பர் 08 ஆட்டம் ஒன்றில் குப்பிளான் குறிஞ்சிகுமரன் அணியை எதிர்த்து நாவற்குழி அன்னை அணி மோதியது.

ஆட்ட நேர முடிவில் 02:01 என்ற கோல் கணக்கில் அன்னை அணி வெற்றி பெற்றது.

குறிஞ்சிகுமரன் அணி சார்பாக கஜரதன் ஒரு கோலை பெற்றுக் கொடுத்தார்.



# அரசின் இன்றைய நிலையை தோலுரித்தார் ஹரீஸ் எம்.பி.

கொழும்பு, ஓக. 05

இந்த நாட்டில் இப்போதைய சூழ்நிலையில் முஸ்லிங்களாகிய நாம் மிகப்பெரும் சவால்களுக்கு முகம்கொடுத்து வருகிறோம். எமது உரிமைகள், நிலங்கள், சொத்துக்களைப் பாதுகாப்பதில் பாரிய முரண்பாடுகள் தோற்றுவிக்கப்பட்டுள்ளது என முன்னாள் இராஜாங்க அமைச்சரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பிரதித் தலைவருமான சட்டத்தரணி எச்.எம்.எம்.ஹரீஸ் தெரிவித்தார்.

கொழும்பு மற்றும் கண்டி மாவட்ட மஸ்ஜித் சம்மேளனம் ஏற்பாடு செய்த 'முஸ்லிம்களின் உரிமைகளை பாதுகாப்பதற்கான மாநாடு' நேற்று தெஹிவளை முஹைதீன் ஜும்ஆ பள்ளிவாசலில் நடைபெற்றது இங்கு கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு உரையாற்றினார்.

தனது உரையில் மேலும்,

இந்த நாட்டில் தொடர்ந்தும் மார்க்கவிடயங்களை கடைபிடிக்க முடியுமா என்ற சவால் எம் முன்னால் உள்ளதுடன் எமது பூர்விக நிலங்களையும் அந்நியர்கள் ஆக்கிரமிக்கும் சம்பவங்களும் நடந்துவருகிறது. அதைவிட இந்த நாட்டில் வாழும் முஸ்லிங்களின் தனிமனித பாதுகாப்பு பாரிய சவாலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

எமது முஸ்லிம் உம்மத்து இவற்றுக்கெல்லாம் பயந்து ஒடுங்கி வாழ முடியாது. இப்போது கொண்டுவரப்பட்டுள்ள முஸ்லிம் விவாக சட்டத்தை எண்ணி முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களாகிய நாங்கள் வெட்கப்படுகிறோம். கடந்த பல தசாப்தங்களாக இந்த நாட்டின் ஆட்சியை தீர்மானிப்பவர்களாக இருந்திருக்கிறோம். அசைக்க முடியாத பலத்துடன் இருந்த மஹிந்த அரசையே வீழ்த்திய பெருமைக்குரிய முஸ்லிம் சமூகம் இன்னும் சில மாதத்தில் வரும் ஜனாதிபதி தேர்தலில் கூட பேரம் பேசும் சக்தியாக இருக்கிறோம். நமக்குள் நாம் பிளவுபட வேண்டிய அவசியம் இல்லை.

கடந்த காலங்களில் இருந்த எமது தலைமைகள் இந்த சமூகத்திற்கு சிறப்பான சேவைகளை வழங்கியதை பெருமையோடு நினைவுகூர்கிறேன். இந்த சமூகம் சார்ந்த பிரச்சினைக்காக எல்லோரும் அமைச்சை இராஜினாமா செய்தோம். வெளிநாட்டு நிதி ஒதுக்கீட்டு முகவராலயங்களின் அஜந்தாக்களுக்கு நாங்கள் கட்டுப்பட முடியாது.

ஒரு நாள் மட்டுமே இடம்பெற்ற சம்பவத்தை காரணம் காட்டி எம் முஸ்லிம் பெண்களுக்கு இந்த ஆட்சியாளர்கள் கொடுக்கும் தண்டனை மிக பெரியது. அதை ஒருகாலமும் அனுமதிக்க முடியாது.

ஆண்டாண்டுகாலமாக நாங்கள் வாழ்ந்துவரும் எமது பூர்விக நிலங்களை கையகப்படுத்த தமிழ் தேசிய கூட்டமைப்பு முயற்சி செய்கிறது. கல்முனை என்பது முஸ்லிங்களின் பழமையான நகரம். அந்த நகருக்கென்று பல சிறப்புகள் இருக்கிறது அதை பொறுத்துக்கொள்ள முடியாத இனவாதிகள் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி இந்த நாட்டின் தலைமைகளுக்கு அழுத்தம் கொடுத்து வருகிறார்கள். அதே போன்றே வாழைசேனை, தோப்பூர் விவகாரத்திலும் தமிழ் தேசிய கூட்டமைப்பு அழுத்தம் கொடுத்து வருகிறது.

இந்த சதிகளை முறியடித்து சரியான அணுகுமுறை அரசியலை முன்னெடுக்க நாங்கள் தயாராக இருக்கிறோம்–என்றார். (ஐ)

## தலதா மாளிகை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச் சோதனைச் சாவடிகள் 60 கோடி ரூபா செலவில் உருவாக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எசல பெரஹெர இடம்பெறும் நாட்களில் சிறப்பு அதிரடி படையினர் உட்பட 7 ஆயிரத்திற்கும் அதிகமான பாதுகாப்பு படையினர் கடமையில் ஈடுபடவுள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவன் குணசேகர தெரிவித்துள்ளார். (ஐ)

## அமைச்சுப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரணில் தீர்மானித்துள்ளார்.

இன்னும் ஓரிரு நாள்களில் அமைச்சுப் பொறுப்பிலிருந்து அவரை பிரதமர் நீக்கவுள்ளதாக உயர்மட்ட அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் பௌத்த பிக்குமார் மீது விமர்சனங்களை முன்வைத்தாலும் அவர் மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லையென பௌத்த பீடாதிபதிகள் தெரிவித்து வந்தனர். (ஐ)

## 10 கிலோ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தனர்.

பளைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாமுனைப் பகுதியில் வைத்து சந்தேகநபர் நேற்று ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டார்.

கடற்படையின் புலனாய்வு அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலுக்கு அமைய மாமுனை – பருத்தித்துறை பிரதான வீதியின் காட்டுப் பகுதிக்குள் பொலிஸாரின் ரோந்து நடவடிக்கையின்போது சந்தேகநபர் கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து 5 பொதிகள் பொதியிடப்பட்ட 10 கிலோ கிராம் கஞ்சா போதைப்பொருள் கைப்பற்றப்பட்டன.

செம்பியன்பற்றுப் பகுதியைச் சேர்ந்த 38 வயதுடைய குடும்பத் தலைவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார். அவரிடம் கைப்பற்றப்பட்ட கஞ்சாவின் பெறுமதி 15 லட்சம் ரூபா என கணக்கிடப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார், சந்தேகநபரை இன்று கிளிநொச்சி நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுத்தனர். (ஐ)

## ஐ.தே.க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டணியில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஆகியவற்றின் உறுப்பினர்கள் இணைந்துகொள்ளவுள்ளனர் என அமைச்சர் பீ.ஹெரிசன் கூறியுள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் இரத்தினபுரியை சேர்ந்த உறுப்பினர்கள் மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் குருநாகல் மாவட்ட உறுப்பினர்கள் இவ்வாறு இணைந்துக்கொள்ளவுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

அநுராதபுரத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றியபோது இதனைக் கூறிய அமைச்சர், புதிய கூட்டணி விரைவில் தனது பலத்தை வெளிப்படுத்தும் என்றும் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## களுத்துறையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பலியாகியுள்ளனர்.

நேற்று அதிகாலை 5.15 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் 3 பெண்களும், 3 ஆண்களுமே உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவன் குணசேகர தெரிவித்தார்.

இந்த விபத்தில் 43 ஆண்களும், 8 பெண்களும், குழந்தை ஒன்றும் உள்ளிட்ட 52 பேர் படுகாயமடைந்துள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

எல்பிட்டியிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்ஸொன்று, மற்றுமொரு வாகனத்தை முந்திச் செல்ல முற்பட்டபோது, எதிர்த் திசையில் வந்த தனியார் பஸ்ஸுடன் மோதியதாலேயே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான தீவிர விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

## மூன்றாவது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளராக சஜித் பிரேமதாஸ களமிறக்கப்படாத பட்சத்திலும், பொதுஜன பெரமுனவுக்கும், சுதந்திரக்கட்சிக்கும் இடையிலான பேச்சு தோல்வியடையும் நிலையிலும் இந்தப் புதிய கூட்டணியை உருவாக்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டணியில் ஐக்கிய தேசியக் கட்சியிலும் பொதுஜன பெரமுனவிலும் அதிருப்தியில் உள்ள அனைத்து தரப்புகளையும் ஒன்றிணைத்து பரந்து பட்ட பலமான மூன்றாவது அணியைக் கட்டியெழுப்புவதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு உருவெடுக்கும் மூன்றாவது அணியானது 'கஜசவித்த சமூக இளைஞர் முன்னணி' என்று தற்போது இயங்கி வரும் அமைப்பின் பெயரில் தேர்தலில் களமிறங்குவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. இப்பெயரில் களமிறங்குவதால் யானைச் சின்னத்தை ஆதரிக்கும் கிராம மட்ட மக்களின் முழுமையான ஆதரவினைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது

கடந்த ஒக்ரோபரில் ஏற்பட்ட அரசியல் புரட்சியின்போது சஜித் பிரேமதாஸவைப் பிரதமர் பதவியை ஏற்குமாறு ஜனாதிபதி அழைப்பு விடுத்திருந்தபோதும் அதனை அவர் மறுத்திருந்தார்.

இருப்பினும் தற்போதைய நிலையில் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் ஏற்பட்டிருக்கும் ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பான பனிப்போர் உச்ச கட்டத்தை அடைந்துள்ளது. இந் நிலையில் எந்தச் சவாலையும் முகங்கொடுத்து ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்குவதற்கு தயார் என்று சஜித் பிரேமதாஸ பகிரங்கமாக தெரிவித்துள்ளார். இந்த அறிவிப்பானது மேற்படி முயற்சியினை பின்னணியாக கொண்டு முதற்கட்டமாக அவர் தரப்பிலிருந்து ஐ.தே.க தலைமைக்கு விடுக்கப்பட்டுள்ள சவாலாக அமைந்துள்ளதாக அரசியல் அவதானிப்பாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ஐ)

## ஐ.தே.கவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாக்கவுள்ள கூட்டணிக்கான ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி தலைமையில் ஜனநாயக தேசிய முன்னணியை அமைக்கும் நிகழ்வு இன்று இடம்பெறும் என, ஐக்கிய தேசியக் கட்சி ஏற்கனவே அறிவித்திருந்தது. எனினும், அந்த கூட்டம் மற்றுமொரு தினத்துக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது. (ஐ)

## வேட்பாளராக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராகக் கரு ஜயசூரியவே களமிறங்குவார் எனச் செய்திகள் வெளியாகியுள்ளன.

இவ்விடயம் குறித்து சில ஊடகங்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்–

ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறங்க நான் தயாராக உள்ளேன்.

ஆனாலும் நான் ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்குவதா? இல்லையா? என்பதைக் கட்சியின் உயர்பீடம்தான் தீர்மானிக்க வேண்டும்.

ஜனாதிபதித் தேர்தலில் என்னை வேட்பாளராக ஐக்கிய தேசிய கட்சி களமிறக்கினால் நிச்சயம் வெற்றியடைவேன்.

நான் ஒருபோதும் சூழ்ச்சிகளுக்கும் வன்முறைகளுக்கும் துணை போகவில்லை. கடந்த வருடம் அரங்கேற்றப்பட்ட அரசியல் சதித் திட்டத்துக்கு நாடாளுமன்றத்தில் சம்பிரதாயங்களை மதித்து உரிய பதிலடி கொடுத்தேன்.

இந்த நாட்டிலுள்ள மக்களும், சர்வதேச சமூகத்தினரும் என் மீது அதீத நம்பிக்கை வைத்துள்ளனர். அதை ஒருபோதும் வீணடிக்க மாட்டேன் – என்றார். (ஐ)

## இரு வாரங்களுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரத்ன மாகாண சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர்களுக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

அந்தவகையில், இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை பாதுகாப்பு மதிப்பீடுகளைச் செய்யுமாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு அமைவாக மாகாண சிரேஷ்ட பிரதிப்பொலிஸ்மா அதிபர்கள் தமது சேவைக்கு உட்பட்ட மாகாண பாதுகாப்பு நிலைமை குறித்து அரச புலனாய்வுச் சேவை விடே பணியகம், பயங்கரவாத விசாரணைப் பிரிவு ஆகிய பிரிவுகளின் அதிகாரிகள், மாவட்டத்துக்குப் பொறுப்பான பிரதிப்பொலிஸ்மா அதிபர்கள், தொகுதிகளுக்கு பொறுப்பான பொலிஸ் அதிகாரிகளை அழைத்து மதிப்பீடுகளை மேற்கொள்ளுமாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

நாட்டில் கடந்த ஏப்ரல் 21இல் இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதல்களைத் தொடர்ந்து நாடு முழுவதும் பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதன்படி பாதுகாப்புச் சபைக் கூட்டங்கள், விசேட குழு விசாரணைகள், தேடுதல் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்ற நிலையில், மாகாணங்கள் ரீதியாக பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக இந்த நடைமுறையை மேற்கொள்ளுமாறு பணிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## சுய ஆட்சியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

அத்துடன், உரிமைகளைப் பெற்றுச் சுதந்திரமாகவும் சுய ஆட்சியுடனும் வாழவேண்டியது எமது பிறப்புரிமை. அதை எவராலும் மறுக்க முடியாது. அதனை அடைவதற்குத் தமிழ் மக்கள் தொடர்ந்தும் ஒன்றுபட்டு இருக்க வேண்டும் எனவும் அவர் கோரினார்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் மக்கள் சந்திப்பு நேற்று திருகோணமலையில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தமிழ் மக்களின் ஒற்றுமையின் காரணமாகவே இன்றைக்கு இலங்கையில் ஜனநாயகம் நிலவுகின்றது. நீதிமன்றம் சுயாதீனமாக செயற்படுகின்றது. மக்களின் வாக்குறுதிக்கு அமைய நாம் எமது செயற்பாடுகளைப் பக்குவமாகச் செயற்படுத்துகின்றோம்.

எனவே மக்கள் ஒற்றுமையாக இருந்து உரிமையை வென்றெடுக்க முன்னெடுக்கும் எமது செயற்பாடுகளுக்கு ஆதரவு தரவேண்டும்.

நாம் தமிழ் மக்களது பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு பல செயற்பாடுகளை முன்னெடுக்கும்போதும் அதனை பத்திரிகைகளுக்கு தெரிவிப்பதில்லை. அவ்வாறு கூறினால் ஆபத்து ஏற்படும். அவ்வாறு கூறினால் சிங்களப் பத்திரிகைகள் வரும், சிங்கள அரசியல்வாதிகள் அதைப் பேசுவார்கள். பிழைகள் ஏற்படும்.

இதேவேளை, இன்று மக்களின் காணிகளில் மூன்றில் இரண்டு பகுதி காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளன. ஆனாலும் மிகுதிக் காணிகளும் விடுவிக்கப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு. அதனை விடுவிக்க நாம் தொடர்ந்து செயற்படுகின்றோம்.

அதேபோல் காணாமல்போனவர்கள் விடயத்தில் நாம் மிகுந்த கரிசனையுடன் செயற்படுகின்றோம். காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்பது தொடர்பாக கட்டாயம் பதில் சொல்லியே ஆக வேண்டும். அவர்கள் சம்பந்தமான உண்மையைச் சொல்லவேண்டும்.

அத்துடன், காணாமல்போனோர் அலுவலகம் முன்னர் உருவாக்கப்பட்டது. இப்போது பரிகாரம் சம்பந்தமான அலுவலகம் உருவாக்கப்படவுள்ளது. இரண்டு அலுவலகமும் சேர்ந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளுக்கு தமது ஆதரவை வழங்க வேண்டும்.

இதற்கான எமது செயற்பாடுகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இது தொடர்பாக அடுத்துவரும் வாரங்களில் நாமும் எமது செயற்பாடுகளை மும்முரமாக செய்யவுள்ளோம்.

அத்துடன், நாம் எமது கடமைகளிலிருந்து தவறவில்லை. எவருக்கும் நாம் முண்டு கொடுக்கவில்லை.

இந்நிலையில், அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கான வேலைப்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஜனாதிபதி வேட்பாளர்கள் குறித்து பிராதான கட்சிகளுக்குள் குழப்பம் நிலவுகின்றது.

இந்தக் குழப்பங்கள் முடிவடைந்து கட்சி வேட்பாளர்களின் அறிவிப்பின் பின்னர் நாம் எமது ஆதரவு தொடர்பாக தெரிவிப்போம் – என்றார். (ஐ)

# கொலைக் குற்றச்சாட்டுகளுடன் தொடர்பில்லாதவருக்கே ஆதரவு

## குமார வெல்கம அதிரடி அறிவிப்பு



கொழும்பு, ஓக. 05

ஜனநாயகத்தை மதிக்கும் கொலைக் குற்றச்சாட்டுக்களுடன் தொடர்பில்லாத ஒருவரை எதிர்க் கட்சித்தலைவர்மஹிந்தராஜபக்ஷ, ஜனாதிபதி வேட்பாளராக களமிறக் கினால்நிச்சயம் ஆதரவளிப்பேன் என நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தல் குறித்து ஊடகங்களுக்கு கருத்து தெரி விக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்–

எதிர்க்கட்சித்தலைவர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராகச் செயற் படமாட்டேன். ஆனால் அவர், தற்போது மேற்கொண்ட தீர்மா னங்கள் தவறானவையாக உள் ளன. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி யைப் பாதுகாக்கும் பொறுப்பு அவருக்கு உள்ளது.

மஹிந்தவுக்கும் எனக்கும் எவ்வித தனிப்பட்ட பிரச்சினைக ளும், அரசியல் பிரச்சினைகளும் கிடையாது. ஆனால் ஒரு தரப்பினர் பிரச்சினைகளை ஏற்படுத்தி விட்டு நன்மதிப்பைப் பெற்றுக் கொள்ள முயற்சிக்கின்றார்கள்.

ஜனநாயகத்தை மதிக்கும் – கொலை குற்றச்சாட்டுக்களுடன் தொடர்பில்லாத ஒருவரை ஜனாதி பதி வேட்பாளராக மஹிந்த கள மிறக்கினால் நிச்சயம் ஆதரவு வழங்குவேன் – என்றார். (ஐ)

# தமிழர் உரிமைகளை எவரும் தட்டிப் பறிக்க விடமாட்டோம்

## அமைச்சர் மனோ திட்டவட்டம்



கொழும்பு, ஓக. 05

தமிழரின் உரிமைகளை எவரும் தட்டிப் பறிக்க விடமாட்டோம் என அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார். அதேவேளை அடுத்தவர்க ளின் உரிமைகளையும் தட்டிப் பறிக்கமாட்டோம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

கண்டி, நாவலப்பிட்டி பகுதியில் ஜனநாயக மக்கள் முன்னயின் காரியாலயத்தை நேற்றுத் திறந்துவைத்து மக்கள் மத்தியில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

இந்தக் காரியாலயம் திறந்துவைக்கும் நிகழ் வில் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வேலுகுமார், நாவலப்பிட்டி நகரசபையின் தலைவர் சங்க சம்பத் சஞ்சீவ மற்றும் பொதுமக்கள் பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது மேலும் கருத்துத் தெரிவித்த அமைச்சர், அரசு எங்கள் என்பதனை யாரும் மறந்து விடக்கூடாது.

இந்த நாட்டில் வாழ்கின்ற சிங்கள, தமிழ் மற் றும் முஸ்லிம் மக்கள் எவ்வித வேறுபாடுகளும் இல்லாமல் இன, மத ரீதியாக ஒன்றுபட்டு இருக்க வேண்டும். அவ்வாறு இருந்தாலேயே சமத்துவம் ஏற்படும். சமத்துவம் ஏற்பட்டாலே நாட்டின் மக்களிடையே ஐக்கியம் காணப்படும்.

ஆனால் ஐக்கியம் எனக்கூறிகொண்டு அரசின் காலடியில் நாங்கள் சரணடையவில்லை. எந்த அரசு வந்தாலும் கெஞ்சும் பழக்கம் எமக்குக் கிடையாது. எமக்கு உரித்தானதை தேவையானதை கேட்டுத் தான் பெற்றுக்கொள்கிறோம்.

அடுத்தவர்களின் உரிமைகளை நாம் என்றும் பறிக்கமாட்டோம். எமது உரிமைகளை எவரையும் தட்டிப்பறிக்கவும் விடமாட்டோம் – என்றார். (ஐ)

# இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவரானார் சிவா

## செயலாளர் நிமல், பொருளாளர் விக்கி

கொழும்பு, ஓக. 05

இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் புதிய நிர்வாகத் தெரிவு கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நேற்றுக் காலை நடைபெற்றது.

இதன்போது 'தமிழன்' செய்திச் சேவையின் தலைமைப் பொறுப்பாசிரியர் ஆர்.சிவராஜா தலைவராகவும், 'தினக்குரல்' பத்திரிகையின் உதவி ஆசிரியர் யோ.நிமல்ராஜ் செயலாளராகவும், 'சூரியன்' எவ்.எம். செய்திச் சேவையின் தலைமை செய்தி ஆசிரியர் ப.விக்னேஸ்வரன் பொருளாளராகவும் ஏகம னதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ஐ)



# அரசுக்கு எம் பலத்தை காட்டும் நேரம் வரும்

## பாதிக்கப்பட்ட பட்டதாரிகள் காரைதீவில் எச்சரிக்கை

மட்டக்களப்பு, ஓக. 05

கடந்த சில நாட்களுக்கு முன்னர் அரசினால் வழங் கப்பட்ட நியமனத்தில் வெளிவாரிப் பட்டதாரிகள் புறக் கணிக்கப்பட்டத்தை கண்டித்து நேற்றுக் காலை காரை தீவில் ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றது.

அம்பாறை மாவட்ட வேலையில்லாப் பட்டதாரிகள் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் விபுலானந்த சதுக்கத்தில் ஒன்று கூடிய வெளிவாரி பட்டதாரிகள் அரசுக்கு எதிராக கோங்களை எழுப்பிக் கொண்டு விபுலானந்த சுற்றுவட் டத்தில் பேரணியாகச் சென்றனர். இங்கு ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த வேலையில்லா பட்டதாரிகள்,

கடந்த சந்திரிகா அம்மையார் காலத்தில் 45000க்கும் மேற்பட்ட பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கப்பட்டது. மஹிந்த ஆட்சி காலத்தில் 70000 இற்கும் மேற்பட்ட பட்டதாரிகளுக்கு பலவகையான நியமங்கள் வழங் கப்பட்டது. அதில் எந்த அரசும் உள்வாரி, வெளிவாரியென எந்த பாகுபாடும் காட்டியதில்லை.

156 நாட்களுக்கு மேலாக நாங்கள் போராடிய போது எங்களுக்கு இந்த அரசினால் தந்த வாக்குறுதி இப்போது புஸ்வானம் ஆகியுள்ளது. எங்களை இவர்கள் நிராகரித்து புறந்தள்ளிவிட்டு இந்த நியமனங்கள் வழங்க காரணம் என்ன? எங்களை மன ரீதியாக பாரிய உளைச்சலுக்கு இந்த அரசு தள்ளியுள்ளது.

எங்களுக்கான நியமனத்தை இந்த அரசு உடனடியாக வழங்க முன்வரவேண்டும். இல்லாது போனால் எதிர் வரும் காலங்களில் ஏற்படும் தேர்தல்களில் நாங்கள் எங்களுடைய பலத்தை காட்டவேண்டிய சூழ்நிலை உரு வாகும். கௌரவ பிரதமர் உடனடியாக எங்களின் குர லுக்கு செவிசாய்க்க வேண்டும் – என்றனர். (ஐ)

# முருங்கன் நகர் சந்தை கட்டடம் திறந்துவைப்பு

மன்னார், ஓக 05

மன்னார், முருங்கன் நகர் மக்களின் நீண்ட நாள் குறைபாடாகக் காணப்பட்ட பொதுச்சந்தை, புதிய கட்டடத் தொகுதியுடன் திறந்து வைக்கப் பட்டது.

வடக்கு மாகாணத்தில் தெரிவு செய்யப்பட்ட 11 உள்ளூராட்சி மன்றங்களைப் பலப்படுத்து வதற்காக நானாட்டான் பிரதேச சபையும் உள் வாங்கப்பட்டுள்ளது.

அதற்கிணங்க உள்ளூராட்சி மன்றங்களை பலப்படுத்துகின்ற நிறுவனமான ஆசிய பவுண் டேசன் நிறுவனத்தின் நிதிப் பங்களிப்புடனும், நானாட்டான் பிரதேச சபையின் நிதிப் பங்க ளிப்புடனும் பொதுச்சந்தை கட்டடத் தொகுதி திறந்துவைக்கப்பட்டது.

குறித்த பொதுச் சந்தைக் கட்டடம் நேற்று முன்தினம் சனிக்கிழமை வைபவ ரீதியாக திறந்துவைக்கப்பட்டது.

நானாட்டான் பிரதேச சபையின் தவிசாளர் திருச்செல்வம் பரஞ்சோதி, பிரதேச சபையின் செயலாளர், உறுப்பினர்கள், இணைந்து கட்ட டத்தை திறந்துவைத்தனர். இந்நிகழ்வில், முருங்கன் வர்த்தக சங்கச் செயலாளர், வர்த்தக சங்கப் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

குறித்த சந்தைக் கட்டடத்தின் கடைகள் வர்த்தகர்களுக்கு குத்தகை அடிப்படையில் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)




## வடக்கில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதே எம் நோக்கம்

# யாழ். புதிய கட்டளைத் தளபதி

யாழ்ப்பாணம், ஓக. 05

வடக்கில் சமாதானத்தையும் நல் லிணக்கத்தையும் ஏற்படுத்துவதே தனது நோக்கம் என யாழ். மாவட்டக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ருவான் வணிகசூரிய தெரிவித்துள் ளார்.



யாழ்ப்பாணப் பாதுகாப்புப் படை களின் கட்டளைத் தளபதியாக புதி தாக பதவியேற்றுள்ள இவர் நேற்று ஞாயிற்றுக்கிழமை நல் லூர் ஆல யத்திற்கு விஜயம் மேற் கொண்டு பூசை வழிபாடுகளில் கலந்து கொண்டார்.

பூசை வழிபாடுக ளில் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்க ளுக்கு கருத்து தெரி வித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித் தார்.

வடக்கில் சமாதா னத்தையும் நல்லி ணக்கத்தையும் ஏற்படுத்துவதே தனது நோக்கமாக இருப்பதாகவும் அதற்காக தான் செயற்படவுள்ளார் என்றும் தெரிவித்தருவான் வணி கசூரிய, நல்லிணக்கத்துக்காக தற் போது நல்லூர் ஆலயத்தை தரிசித் துச் செல்வதாகவும் குறிப்பிட்டுள் ளார். (ஐ)

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிரஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 05.08.2019 இல் வெளியிடப்பெற்றது.